பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 32 திங்கட்கிழமை (16-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:232

## மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை:

# புதன்கிழமை முதல் பாடசாலைகளுக்கு மாணவரைத் திரும்புமாறு கோரிக்கை!

## ஆனால் திவ்வியன் விடுதலையாகும் வரை பல்கலைக்கழகப் பகிஷ்கரிப்புத் தொடரும்

யாழ்ப்பாணம்,ஜூலை16

**யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாகப் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து வரும் மாணவர்களை அவர்களது கல்வி நலன் கருதி போராட்டத்தைக் கைவிட்டுப் பாடசாலைகளுக்குத் திரும்புமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியிருக்கின்றது.**

**அடுத்த பாடசாலைத் தினமான - நாளை மறுதினம் - புதன்கிழமை முதல் சகல மாணவர்களையும் பாடசாலைகளுக்குத் திரும்பி முழுமையான கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.**

**ஆனால் -**

**கைது செய்யப்பட்ட மாணவன் திவ்வியன் விடுவிக்கப்படும் வரை தாங்கள் - பல்கலைக்கழக மாணவர்கள் - மேற்கொண்டு வரும் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்றும் மாணவர் ஒன்றியம் அறிவித்திருக்கிறது.**

மாணவன் திவ்வியன் கைது மற்றும் பல்கலைக்கழகம் மூடப்பட்டமை ஆகியவற்றை அடுத்து குடாநாடு உட்பட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்து போயிருக்கும் நிலையிலும் அரசு இது விடயத்தில் தொடர்ந்து பாராமுகமாக இருந்து வருகின்றது. அடுத்த சில வாரங்களில் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திவ்வியனை ஆஜர் செய்ய ஒரு வாரகால அவகாசம்

### தளபதி ஜெயசுந்தர உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஜூலை16

அடுத்த ஒரு வார காலத்தினுள் மாணவன் திவ்வியனை நீதிமன்றில் ஆஜர் செய்யவும் பல்கலைக்கழகத்தினை மீண்டும் ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை -

பாடசாலைகளை மீண்டும் இயக்கவும் கல்விச் செயற்பாடுகள் தடைப்படாது இருக்கவும் நீங்கள் ஆதரவு தரவேண்டும்.

- இவ்வாறு யாழ்.கல்விச் சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் 51 ஆவது படைப்பணியின் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர.

மாணவன் திவ்வியனின் கைது மற்றும் அதனையடுத்து குடாநாட்டில் எழுந்துள்ள தற்போதைய நிலைமை குறித்து ஆராயும் வகையில் அவர் நேற்று 51 ஆவது படையணியின் தலைமையகமான "சுபாஸ் ஹோட்டலில்" கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பொலீஸ் அத்தியட்சகர் குடா ஹெட்டிய, துணைவேந்தர் பேராசியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சுநா.தணிகாசலம்பிள்ளை, வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும் யாழ். மத்திய கல்லூரி அதிபருமான க.இராசதுரை மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர மேலும் தெரிவித்ததாவது:-

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திவ்வியனை விடுவிக்க கோருகின்றது கூட்டணி

### மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,ஜூலை16

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவனை நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்வாறு அரசிடம் கோரியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற சமயம் அக்கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திவ்வியன் கைது செய்யப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கில் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு நகரில்

## சாரதி தாக்கப்பட்டதை அடுத்து பஸ் ஊழியர் வேலைநிறுத்தம்

மட்டக்களப்பு,ஜூலை16

மட்டக்களப்பு நகரில் பஸ் சாரதி ஒருவரை இராணுவத்தினர் மிக மோசமாகத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தின் எதிரொலியாக நேற்று ஞாயிறு காலை மக்கள் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு நகரில் பஸ் நிலையத்திற்கு அடிக்கல் நடுவதற்காக பிரதியமைச்சர் கணேசமூர்த்தி நேற்று வருகை தந்தபோது அவரது பாதுகாப்பிற்கு வந்த இராணுவத்தினர் பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புதைகுழியில் இரு சடலங்கள்

மட்டக்களப்பு,ஜூலை16

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கிரான்குளம் பகுதியில் உள்ள முந்திரிகைத் தோட்டம் ஒன்றில் தரையில் புதைக்கப்பட்ட நிலையில் இரு சடலங்கள் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டன.

காத்தான்குடி பொலீஸார் இந்த இரு சடலங்களையும் மீட்டுள்ளனர்.

இவை கடந்த வியாழக்கிழமை கிரான்குளத்தில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட செங்கல் வியாபாரிகளின் சடலங்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ)

## கிழக்கில் பொலீஸ் அதிகாரி நேற்று சுட்டுக் கொலை!

திருகோணமலை,ஜூலை16

திருகோணமலை மாவட்டம் ஆலங்கேணி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்றுக் காலை 7.40 மணியளவில் இடிமண் என்ற இடத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கிண்ணியாவைச் சேர்ந்த அஜ்மீர்கான் லியாத்தலி (வயது 34) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கிண்ணியாப் பகுதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. (ஐ-3-7-9-145)

## நாடாளுமன்றத்தைக் கூட்ட சபாநாயகர் அனுரா மறுப்பு!

### எதிர்க்கட்சித் தலைவருக்கு நேற்று கடிதம்

கொழும்பு,ஜூலை16

நாடாளுமன்றத்தை இன்று கூட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் விடுத்த கோரிக்கையை சபாநாயகர் நேற்று நிராகரித்தார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றை சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் தீர்மானம் - நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவே - எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அதனை மீளாய்வு செய்வதற்கு எனக்குப் போதிய ஆதாரங்கள் இல்லை.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் அனைத்துக்கும் ஜனாதிபதியே முழுப் பொறுப்பையும் கொண்டுள்ளார் என்று நிரூபிக்கப்பட்ட கருத்தை நான் நன்கு ஆராய்ந்தேன். நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை பாடசாலை உப அதிபர் கடற்கரையில் சடலமாக மீட்பு!

திருகோணமலை,ஜூலை16

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் உபஅதிபர் எஸ்.சிவகணநாதன் (வயது 35) நேற்றுக் காலை கோணேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் உள்ள கடற்கரையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்லூரி வீதியில் வாடகை வீடு ஒன்றில் வசித்து வரும் இவர் நேற்று முன்தினம் இரவு சீனி வாங்கி வருவதாகக் கூறிவிட்டு, வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் -

பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் நேற்றுக் காலை கடற்கரையில் நிர்வாணமான நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரி மூச்சுத் திணறலால் ஏற்பட்ட மரணம் எனத் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவகணநாதன் யாழ்ப்பாணம் இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-145)

### முஸ்லிம் மாணவர் பலியான சம்பவம்:

## இரண்டாவது நாளாக கல்முனையில் ஹர்த்தால்

கல்முனை நகரில் இரு முஸ்லிம் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்றும் இரண்டாவது நாளாகக் ஹர்த்தால் இடம்பெற்றது.

கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது போன்ற பகுதிகளில் இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தாலில் ஈடுபட்ட பெண்கள் உட்படப் பலர் பொலீஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதேவேளை -

முஸ்லிம் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நேரில் விசாரித்து அறிவதற்காக நேற்று கல்முனைக்குப் பலத்த பாதுகாப்புடன் விஜயம் செய்த தேசிய ஐக்கிய முன்னணியின் பிரமுகர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. (ஐ-3-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## அரசு தொடர்ந்து பாராமுகமாக இருப்பினும்

# கல்விப் பாதிப்பைத் தவிர்க்கவே பாடசாலை செல்லக் கோருகிறோம்

## மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை

**பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் பாடசாலை மாணவர்களைப் பாசாலைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று மாலை விடுத்த அறிக்கை இங்கு முழுமையாகப் பிரசுரமாகின்றது.**

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடயத்தில் முழுத் தமிழ்ச் சமூகமுமே அரசினது இனவாத அராஜகத்திற்கு எதிராகத் திரண்டுள்ளது. இவ்வாறு மக்களின் நிலைப்பாட்டிற்கு எதிரான அடிப்படையான பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்பதனைவிடுத்து அரசபடைகள் குறுக்கு வழிகளில் இப்பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடுகின்ற கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இது இராணுவத்தினர் குறித்து மக்களின் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் பெரும் விசனத்தை ஏற்படுத்தி வருகின்றது. ஒருபுறம் இராணுவ அதிகாரிகளும், ஆயுதப் பொலீஸ் படையினரும் சேர்ந்து பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகளை இராணுவ முகாம்களுக்கு அழைத்து அச்சுறுத்தி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு வழங்கக் கூடாது என வற்புறுத்தி வருவதுடன் மாணவர்களைப் பலாத்காரமாக பாடசாலைகளுக்கு வருவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மறுபுறம், பாடசாலை மாணவரின் கல்வியைக் குழப்பும் முயற்சியில் நாம் ஈடுபடுவது போலவும் பிள்ளைகளின் கல்வியைச் சீரகுலைக்க பெற்றோர் அனுமதிக்கக்கூடாது என்று கூறி தாம் எம்மிலும் எமது மக்களிலும் அளவு கடந்த அக்கறை கொண்டுள்ளவர்கள் போலவும் நீலிக் கண்ணீர் வடிக்கின்றார்கள்.

எமது சமுதாயத்தின் எதிர்காலச் செல்வங்களான மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற ஸ்ரீலங்கா அரசே 'ஆடு நனைகின்றது என ஓநாய் அழுகின்றது' போன்று இம்மக்களுக்காக வெனக் கூறி பூச்சாண்டி காட்டுகிறது; இன்று தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கும் நோக்குடன், மாணவர்களின் மனோநிலையை முற்று முழுதாக திசைதிருப்பிவிடும் பாலியல் ஆபாச, சினிமாத் திரைப்படங்களை தாராளமாக இறக்குமதி செய்து விநியோகித்து வருகின்றது. பாலியல் ஆபாச படங்கள் சாதாரணமான வீடியோ கடைகளிலும் பெறக் கூடிய அளவுக்கு அது தருவிக்கப்படுவது அரசினால் இலகுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இன்று மாணவர்களின் எதிர்காலத்தினை மண்ணாக்கும் நோககுடன் கொழும்பு விலையில் புகைக்கும் வஸ்துக்கள், குடிவகைகளை பாதுகாப்பு அனுமதி இல்லாமலே தாராளமாக இறக்குமதி செய்து விநியோகித்து வருவதற்கான அனைத் ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்து கொடுத்து வருகின்றது. கல்வி பயிலும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஸ்ரீலங்கா அரசு செய்துவரும் மாபெரும் துரோகச் செயல்கள் இவையாகும்.

**இனத்தை வேரறுக்க முயற்சி**

ஒரு தனித்துவமும் தன்மானமும் மிக்க ஓர் இனத்தை வேரோடு - இருந்த இடமே இல்லாது - சாய்ப்பதற்கு மிகவும் இலகுவாகக் கொள்ளக்கூடிய நடவடிக்கையாக இருப்பது அவ்வினத்தின்பால் அமுலபடுத்தப்பட்டிருக்கும் சட்டங்களையும் ஒழுங்குகளையும் தளர்த்தி விடுவதாகும். அதே வகையில் இன்று குடாநாட்டில் எம்மினத்தை சீரழிக்க சட்ட ஒழுங்குகள் தாராளமாகத் தளர்த்தி (Lowless Situation உள்ளனர். இது எம் இளம் சமூகத்தினரைச் சீரழிப்பதற்காகவே.

சாதாரணமான குடிவகைகளுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி (MOD) இலகுபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரை அவற்றை வடபகுதிக்கு அனுப்புவது முதல் இங்கு மாணவர்களின் கைகளுக்கு அவை வந்துசேர்வது வரை பாதுகாப்பு அனுமதி உட்பட அனைத்து அனுமதிகளும் ஸ்ரீலங்கா அரசினால் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீரழிப்பதற்காகவே என்பது அனைவருக்கும் தெளிவான விடயம் ஆகும்.

திவ்வியன் கைதைக் கண்டித்தும அவரை விடுவிக்கவும் கோரி அனைத்துக் கல்விச் சமூகமும் காலவரையறையற்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால் கல்வி கற்கும் முழு சமூகமுமே தனது கல்விச் செயற்பாட்டினைத் தொடர முடியாமல் இருப்பதையிட்டு ஸ்ரீலங்கா அரசும் அரசபடைகளும் மௌனம் சாதிக்கின்றன. தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியைச் சீரழிக்க வேண்டும் என்ற நோக்கில் மாணவர்கள் மீதும் மக்கள் மீதும் இனவாத அராஜகங்களில் ஈடுபட்டு வருகின்ற அரசும் அரசுப்படைகளும் திவ்வியனைக் கைது செய்ததன் மூலம் இங்கு சகல கல்விச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்திருப்பது கண்டு தமது இலட்சியம் நிறைவேறி விட்டதாகக் கருதுவதாகத் தோன்றுகின்றது. ஸ்ரீலங்கா அரசு இவ்வாறு அசமந்தப் போக்கைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பது ஜி.சீ.ஈ. (உயர் தரம்) பரீட்சை, புலமைப் பரிசில் பரீட்சை, இரண்டாம் காலாண்டுப் பரீட்சை என பவற்றைச் சீர்குலைப்பதையே நோககமாகக் கொண்டு செயற்படுகின்றது. ஏற்கனவே தரப்படுத்தலினாலும், இனவாத பாரபட்ச செயற்பாடுகளினாலும் பொருளாதார நடவடிக்கைகளினாலும் எமது கல்வியின் ஆணிவேரை பலமாக சிதைவிட்ட ஸ்ரீலங்கா அரசு அதே அழிவுகரமான செயற்பாட்டைத் தொடர்ந்து வருவது கவலையைத் தருவதாக உள்ளது.

**ஆஜர் செய்ய பின்னடிப்பது ஏன்?**

இன்று மாணவன் திவ்வியனை நீதிமன்றில் ஆஜர் செய்வதற்கு படைத்தரப்பு பின்னடித்து வருகின்றது. அதற்குக் காரணம் திவ்வியனிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தினைப் பெறுவதற்க இராணுவம் திவ்வியனைக் கடுமையாகத் தாக்கி, சித்திரவதைப் படுத்தி அவரது உடலில் வெளிப்புற, உட்புறக் காயங்களை ஏற்படுத்தியிருப்பதே ஆகும். அந்த ஊனக் காயங்கள ஆறிய பின்பே நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டுமென அவர்கள் கருதுகின்றனர். நீதிமன்றில் ஆஜர் செய்யப்படும் போது உட்புற, வெளிப்புறக் காயங்கள் இருப்பதனை மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்குமாயின் திவ்வியன் மீது தாம் வலிந்து சுமத்தியுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாமல் செய்துவிடும் என படைத்தரப்பு கருதுகின்றது.

நேற்றைய தினம் எமது மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் இராஜதுரையுடன் காங்கேசன்துறை தடுப்புமுகாமுக்குச் சென்று திவ்வியனைப் பார்த்தனர். அப்போது திவ்வியன் தான் எந்த விதமான ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை எனத் தெரிவித்ததுடன் தன்னை மிகவும் கடுமையாகத் தாக்கி சித்திரவதைக்கு உட்படுத்தினர் எனவும் தெரிவித்திருந்தார். தற்போது தன்னை தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சித்திரவதையின் போது தனக்கு ஏற்பட்ட உட்புற, வெளிப்புறக் காயங்களுக்காக சிகிச்சைக்குட்படுத்தி வருவதாகவும் பிரதிநிதிகள் முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

உடனடியாக திவ்வியனை நீதிமன்றில் ஆஜர் செய்வதற்கு போதிய ஆதாரம் அவர்களிடம் இல்லாது இருப்பதால் பொய்யான சாட்சிகளையும் சான்றாதாரங்களையும் திரட்டுவதில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

**பரீட்சைகள் பாதிக்கப்படக்கூடாது**

தற்போது திவ்வியனைக் கைது செய்ததால் ஸ்தம்பித்து போயுள்ள கல்விச் செயற்பாட்டினால் உயர்தர வகுப்பு மாணவர்கள், புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், தவணைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் ஆகியோர் பெருமளவில் பாதிப்புக்கு உட்பட்டுள்ளார்கள். ஆனால் அரசு 'கண்டும் காணாது போன்று' கண்மூடியிருக்கின்றது. இம்மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால் பாடசாலை மாணவர்களை அடுத்த புதன்கிழமை தொடக்கம் பாடசாலைகளுக்கு சமுகமளிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். இதுவரை நாளும் - நாம் வேண்டுகோள் விடுப்பதற்கு முன்பாகவே - ஒரு தமிழ் மாணவனுக்குச் சம்பவித்த கோரமான நிலையினைச் சிந்தித்து நீங்களாகவே முன்வந்து எமக்கு அளித்த முழுமையான ஆதரவிற்கு பல்கலைக்கழக சமூகம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. அத்தோடு எமது தமிழ் இனமும் என்றென்றும் உங்களது ஒத்துழைப்பை நினைவு கூரும். உங்களது ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகவே நாம் கருதுகின்றோம். திவ்வியனை விடுவிப்பதற்குத் தற்போது படைத்தரப்பு ஒரு வார அவகாசம் கோரியிருக்கின்றது. இவ்வார இறுதிக்குள் சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் நாடு தழுவிய மாணவர்கள் போராட்டம் இன்னும் பல மடங்கு பூதாகாரமாக அடுத்த வாரம் முன்னெடுக்கப்படும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். விடுதலை கோரி எமது பல்கலைக்கழக வட்டகைக்கு வெளியேயும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து வேறுபட்ட போராட்ட வடிவங்களையும் நாம் தேர்ந்து எடுக்க வேண்டுமா என்பதினை அரசு படைகளின் பதில்கள்தான் நிர்ணயிக்கப் போகின்றன. அதனால் ஏற்படும் பாதகமான பின்விளைவுகளுக்கு அரசும் அரசப்படைகளும்தான் பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மீண்டும் நாம் வேண்டுகின்ற போது மக்களும் மாணவர்களும் தமது முழுமையான ஆதரவை வழங்கி தமிழனத்தின் மீதான அரசினதும் அரசுப்படைகளினதும் அராஜகத்துக்கு எதிராக அணிதிரள வேண்டும் என அன்பாக வேண்டுகின்றோம். திவ்வியனின் விடுதலை கிட்டும் வரை பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை16

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் பின்வருவோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களது உறவினர்களை யாழ்.பொலீஸ் நிலையத்திற்கு வருமாறு அழைத்துள்ளனர்.

★ இராசையா - சதீஸ்குமார் (கோவை இல.B1/363) மீசாலை வடக்கு.

★ மனுவல் - அந்தோணி (கோவை இல.B1/420) இல.26 குருநகர் மத்தி, குருநகர்.

★ பாலன் - சிவராசா (கோவை இல.B1/475) மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

★ எஸ்.அம்பிகைபாகன் (கோவை இல.B1/434) குப்பிளான் தெற்கு.

★ பிரான்ஸிஸ் யூடிட் பெரானாசியஸ் (கோவை இல.B1/433) குருநகர். (ஐ-4)

## ஆலயத்தில் புனரமைப்பு வேலை

வலிகாமம்தெற்கு,ஜூலை16

யாழ்ப்பாணம் காட்டுத்துறை அம்பலவாணப் பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் மிகத் துரிதமாகத் நடைபெற்று வருகின்றன.எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் மேற்படி ஆலய கும்பாபிஷேகத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ-152)

## கல்வி ஊக்குவிப்பு போட்டிகள்

காரைநகர், ஜூலை16

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை முன்பள்ளி மாணவர்களிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளில் இம்மாதத்துக்குரிய போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலை 9.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ள இந்தக் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளில் காரைநகர் பகுதியிலுள்ள பாலர் பாடசாலை மாணவர்கள் பங்குபற்ற உள்ளனர். (ஐ-73)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பணம்,ஜூலை16

கைதடி,தென்மராட்சி மீள்குடியேற்றம் தொடர்பாக இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அரச அதிபர் க.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடல் எதிர்வரும 19ஆம் திகதி வியாழக்கிழமை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு அலுவலகத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இப்படியும் திருட்டு முயற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை16

கடையில் சாமான்களை வாங்கிவிட்டு அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தாமல் தப்பி ஓட முற்பட்ட இரண்டு இளைஞர்களில் ஒருவர் ஊர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். மற்றைய நபர் வாங்கிய சாமான்களுடன் தப்பி ஓடிவிட்டார்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் யாழ்.பிறவுண் வீதியிலுள்ள பலசரக்குக் கடை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

மேற்குறித்த வீதியிலுள்ள கடை ஒன்றுக்கு வந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர் கடை வாயிலில் சைக்கிளை வைத்துக் கொண்டு நிற்க, மற்றைய நபர் கடைக்குள் புகுந்து மீன்ரின், பிஸ்கட், சிகரெட், சோடா போன்ற பொருள்களை வாங்கி வெளியில் நின்றவரிடம் கொடுத்து அனுப்பிவிட்டு பணத்தைச் செலுத்தாது தானும் அங்கிருந்துதப்பிச் செல்ல முற்பட்டார்.

நிலைமையைப் புரிந்து கொண்ட கடைக்காரர் "திருடன் திருடன்" என்று கத்தியதும் அயலில் உள்ளவர்கள் திரண்டு வந்து அந்த இளைஞர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்தனர். மற்றைய நபர் வாங்கிய பொருள்களுடன் தப்பி ஓடிவிட்டார்.

பிடிபட்ட நபர் வைத்திருந்த சைக்கிளைப் பறிமுதல் செய்த ஊரவர்கள் பணத்தைச் செலுத்திவிட்டு சைக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறி அவரை அனுப்பினர்.

பின்னர் பறிமுதல் செய்த சைக்கிளை அருகிலுள்ள இராணுவக் காவலரணில் ஒப்படைத்த கடையின் உரிமையாளர், இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-4)

## பல்கலைக்கழக சமூகத்தின் செயற்பாட்டுக்கு முழு ஆதரவு வழங்க ஆசிரியர் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் முழுமையான விடுதலைக்காக அல்லது அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக சமூகமும் மாணவர் ஒன்றியமும் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஆதரவு வழங்குவதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற சங்கத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் தயஞ்சலிங்கம் தெரிவித்தார்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அவர் மேலும் தெரிவிதததாவது:-

எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன இவ்விடயம் தொடர்பாக அரசும், இராணுவத் தரப்பும் சமூகமான முடிவு எடுக்க வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்யாவிட்டால் எதிர்வரும் 20 ஆம் திகதி வடக்கு - கிழக்கு பகுதியில் எட்டு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து சங்கத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒரு நாள் சுகயீன லீவுப் போராட்டத்திற்கு திவ்வியனின் விடுதலை விடயமும் ஒரு கோரிக்கையாக முன்வைக்கப்படும்.

திவ்வியன் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டால் அவரது உண்மையான நிலை வெளி உலகத்திற்குத் தெரியவரும். அவர் மீதான விசாரணை மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்படல் வேண்டும். திவ்வியனின் கைதினால் ஸ்தம்பிதம் அடைந்துள்ள பாடசாலைச் செயற்பாடுகளை வழமைக்குக் கொண்டுவர பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு சங்கம் பூரண ஆதரவு வழங்கும். அவர்களது கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படல் வேண்டும். பல்கலைக்கழகம் மீண்டும் திறககப்பட்டு வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறவும் சங்கம் தனது முயற்சியைத் தொடரும் என்றார் அவர். (ஐ-3)

## ஆடி அமாவாசை தினத்தன்று

# காரைநகர் தீர்த்தக்கரைக்கு பக்தரை அனுமதிக்கக் கோரிக்கை

காரைநகர்,ஜூலை16

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் புனித தீர்த்தக் கரையில் (கசூரினா பீச்) பக்தர்கள் தீர்த்தமாட அனுமதிக்குமாறு கோரி காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள் காரைநகர் கடற்படை பொறுப்பதிகாரிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அத்துடன் வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையினால் யாழ்.மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து தீர்த்தக்கரை வரை அன்றையதினம் நேரடி பஸ் சேவையை நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஆடி அமாவாசை தினத்தன்று வெளியூர்களில் இருந்து வருகைதந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பத்தர்கள் இந்தப் புனித தீர்த்தக்கரையில் தீர்த்தமாடிச் சென்றது குறிப்பிடத்தக்கது. (ஐ-73)

உதயன்

## மாற்றம் தேவையே!

நிறைவேற்று அதிகாரம், சட்டமாக்கும் அதிகாரம், நீதித்துறை அதிகாரம - இவை மூன்றும் ஒரு நாட்டின் நிர்வாகத்தில் முக்கிய அம்சங்கள்; முதுகெலும்பு போன்றவை.

ஒரு கூம்பகத்தின் மூன்று பக்கங்கள் போன்று ஒன்றுடன் ஒன்று முட்டி மோதாமல், ஒன்றை ஒன்று விஞ்சி விழுங்காமல், அதது அதன தன் பணியைச் செவ்வனே செய்தால்தான் ஒரு நாட்டில் ஜனநாயகம் - நியாயத்தின் ஆட்சி - நிலைத்திருப்பதாக அர்த்தம். எமது நாட்டைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம்; சட்டமாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம்; நீதி நிர்வாக அதிகாரம் நீதிமன்றங்களிடம்.

இம்மூன்றும் ஒன்றையொன்று வஞ்சி, ஒன்று மற்றொன்றை விழுங்க முற்பட்டு, தான்தான் அதிகாரம் மிக்கது என்று காட்ட முயன்றதே இன்று நாட்டின் நெருக்கடி நிலைக்குக் காரணமாகும்.

ஒன்றுக்கு ஒன்று கால் இடறாமல், சுமுகமாகப் போகக்கூடிய பண்பை 1978 அரசமைப்பில் உறுதிப்படுத்தாமல் விட்டதன் விளைவையே நாடு இப்போது எதிர்நோக்குகின்றது.

அந்த அரசமைப்பை உருவாக்கிய சமயம் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இருந்தார். சட்டமாக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்த நாடாளுமன்றத்தில் அவரது கட்சியினர் மூன்றில் இரண்டுக்கும் அதிக ஆசனங்களைத் தக்கவைத்திருந்தனர். அத்தோடு அவர்கள் அனைவரினதும் - திகதியிடப்படாமல் ஒப்பமிடப்பட்ட - இராஜினாமாக் கடிதங்கள் ஜெயவர்த்தனாவின் 'பொக்கற்'றுக்குள் இருந்தன. இதனால் சட்டமாக்கும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம் நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதியின் காலடியில் சுருண்டு கிடந்தது.

ஜே.ஆருக்கு நீதித்துறையோடு அதிகம் பிரச்சினை இருக்கவில்லை. அத்தோடு நிறைவேற்று அதிகாரத்துக்குப் பின்னால் சட்டமாக்கும் அதிகாரமும் சுருண்டு கிடந்ததால் நீதித்துறையும் நிறைவேற்றுத் துறைக்கு எதிராக அதிகம் கிளர்ந்தெழும்ப முடியவில்லை.

எனவே, ஜனநாயகம் நாட்டில் முற்றாகப் பேணப்பட்டதோ இல்லையோ, ஜனநாயக 'செற் - அப்' நாட்டில் நிலைத்து நின்றது.

இப்போது நிலைமை மாறிவிட்டது.

நாடாளுமன்றத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் நாடாளுமன்ற நடவடிக்கையில் முறையற்ற விதத்தில் நீதிமன்றம் தலையிட்டதாகக் கூறப்படுகின்றது. அதை உதாசீனப்படுத்திவிட்டு தன்பாட்டில் நடக்க நாடாளுமன்றம் முயன்றது.

இதனால் நீதித்துறைக்கும் சட்டமாக்கற்றுறைக்கும் லடாய்.

இப்போது சட்டமாக்கும் நாடாளுமன்றம், தற்போதைய அரசு நாடாளுமன்றில் பெரும்பான்மையை இழந்துவிட்டது என்று தெரிவித்து அந்த அரசைப் பதவியிறக்கச் செய்வதற்காக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முயன்றது.

ஆனால் நிறைவேற்று அதிகாரத் துறையைத் தனது கையின் வைத்திருக்கும் ஜனாதிபதியோ நாடாளுமன்றத்தை இரு மாதங்களுக்கு ஒத்திவைத்ததன் மூலம் சட்டமாக்கும் துறையை தனது அதிகாரம் மூலம் செயலிழக்க வைத்திருக்கின்றார்.

இவ்வாறு பல குளறுபடிகளுக்குக் காரணமான இந்த அரசமைப்பு இருக்கும் வரை - இனப்பிரச்சினைக்கு மட்டுமல்லாமல் - சாதாரண தென்னிலங்கை அரசியல் பிரச்சினைகளுக்குக் கூடத் தீர்வு வரப்போவதில்லை என்பது திண்ணம்.

எனவே அரசமைப்பை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதே.

ஆனால் தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய - சட்ட, ஒழுங்குமுறைப்படி - அது செய்யப்படவேண்டும். ஜனாதிபதி நினைப்பது போன்று, அவரது 'சர்வாதிகார'ப் போக்கின் அடிப்படையிலான நடவடிக்கைகள் மூலம் அல்ல!

# பொன்னாலைக் குளத்தை விரைவில் புனரமைக்க நடவடிக்கை

## முன்னேற்பாட்டுப் பணிகள் ஆரம்பம்

பொன்னாலையில் உள்ள நீர்ப்பாசனக் குளம் மிக விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்திருக்கும் இக்குளம், யாழ்.மாவட்டத்தில் காணப்படும் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் முக்கியமானதாகும். எனினும் கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. இதன் அணைக்கட்டுகளும் வாய்க்கால்களும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

மேற்படி குளத்தைப் புனரமைப்பதற்கான மதிப்பீட்டு வேலைகளைத் தொடர்ந்து தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புனரமைப்பு பணிகளை மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (க-99)

## பஸ் சேவை அதிகரிப்பால் பயணிகள் நன்மை

பருத்தித்துறை - அம்பன் பாதையில் பஸ்சேவை ஐந்தாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் வடமராட்சி கிழக்கு பகுதி மக்கள் பெரும் நன்மை அடைந்துள்ளதாக நாகர்கோவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்னர் மூன்று தடவை இடம்பெற்று வந்த இப்பஸ் சேவை ஐந்து தடவைகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் மற்றும் யாழ்போதனா வைத்தியசாலை, கச்சேரி அலுவலர்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர்.நகருக்கு நாளாந்தம் செல்லும் பொதுமக்களும் கூடிய வாய்ப்பு வசதிகளைப் பெற்றுள்ளானர்.

மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தந்த வடபிராந்திய போக்கு வரத்துச் சபை பருத்தித்துறை டிப்போ முகாமையாளருக்கு சங்கம் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துள்ளது.

## நாட்டு நடப்பு

### போதை - VII

பனைதந்த கள்ளை மொன்று
பாழான வயிறு புரள
பனை பின்னால் பதுங்கிக் குந்தி
படுதுயர் போக்கும் போது
இடையிலே கிடந்த கன்னி
இடியெனப்பின்னால் முழங்க
கடையவனே! இவனின் காலை
காப்பதுன் கடனே அன்றோ?

*- விகடகவி -*

### அபிவிருத்தி, புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க

# முகாமைத்துவ அபிவிருத்திக் குழுக்களை பிரதேச செயலக ரீதியில் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பிரதேச ரீதியான முகாமைத்துவ அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை பிரதேசமட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்வதற்காகவே மேற்படி முகாமைத்துவ அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேசசெயலர் பிரிவிலும் பிரதேச செயலரின் தலைமையில் செயற்படத்தக்க வகையில் இம்முகாமைத்துவ அபிவிருத்திக் குழுக்களை அமைத்துக் கொள்ளும்படி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பி வைத்துள்ளது.

நிர்வாக உத்தியோகத்தர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் மேற்படி முகாமைத்துவ அபிவிருத்திக்குழுவில் அங்கத்தவர்களாக இருந்து செயற்படுவரர்கள். (க-99)

## கைதடி மக்கள் கவனத்துக்கு!

கோப்பாய்,ஜூலை16

தென்மராட்சி கைதடி ப.நோ.கூ. சங்க நிர்வாக எல்லைக்குள் வசித்து தற்போது கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெறும் குடும்பங்களை ஆடி மாதம் நிவாரணம் தொடர்பாக தற்போது அவர்கள தங்கி இருக்கும் பிரிவு கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (க-72)

# சிறுவர்களின் உரிமைகளைப் பேணும் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிப்பு

## பாடசாலை மட்டத்திலும் இனிமேல் கண்காணிப்புக் குழுக்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.மாவட்டத்தில் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவதைக் கண்காணிப்பதற்கும் சிறுவர்களின் உரிமைகளைப் பேணுவதற்கும் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன.

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் சரத்துக்களை நடைமுறைப்படுத்தும் வகையில் யாழ்.மாவட்டத்தில் பல நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவதைக் கண்காணிப்பதற்கும், இவ்விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குமென யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் கிராமிய மட்டக் கண்காணிப்புக் குழுக்கள் செயற்படுகின்றன. இவற்றை விட ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பிரதேச மட்டக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. அத்துடன் மாவட்ட மட்டத்திலான கண்காணிப்புக் குழு ஒன்றும் இயங்கி வருகிறது.

இவற்றை விட தற்போது மேலதிகமாக ஒவ்வொரு பாடசாலை மட்டத்திலும் இவ்வாறான சிறுவர் உரிமைகளைக் கண்காணிப்பதற்கான குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் உரிய வகையில் செயற்படுவதற்கு வசியாகவே மேற்படி நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவுள்ளன என்று மாவட்ட மட்டக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-99)

### ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கான

# பாட நூல்களுக்கு எந்தக் கட்டணமும் அறவிட வேண்டாமென அமைச்சர் பணிப்பு

ஜிசீஈ உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடப் புத்தகங்களுக்கு கட்டணம் அறவிட வேண்டாம் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான விளக்கத்தைச் சுற்று நிருபங்கள் மூலம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் தற்காலிக செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜிசீஈ உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆங்கிலப் பாடப் புத்தகத்துக்கு 50ருபா அறவிடுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டிமெல் சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார் என கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-4)

# கொடிகாமம் - பருத்தித்துறை பஸ்சேவை; பொதுமுகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

"கொடிகாமம் - பருத்தித்துறைக்கான பாடசாலை பஸ் சேவை சீரின்றி மாணவர்கள் பெருஞ்சிரமம்" என்ற தலைப்பில் 06.07.2001 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதம் வருமாறு:-

மேற்படி பாடசாலை சேவை பற்றிய செய்தியில் உண்மையேதும் இல்லை. கொடிகாமம் - பருத்தித்துறை பாடசாலை சேவை என தனியானதோர் சேவை நடைபெறுவதில்லை. சாதாரண சேவையாகவே இச்சேவை நடைபெறுகின்றது.

இச் சேவையில் பொது மக்களுடன், பாடசாலை மாணவர்களும் பிரயாணம் செய்து வருகின்றனர். மேலும் இச் சேவை சீராகச் செயலாற்றியும் வருகின்றது.

வரணி - பருத்தித்துறைப் பாதையில் பாடசாலை சேவை எம்மால் நடத்தப்பட்டு வருகின்றது. இச் சேவையில் ஈடுபடும் பஸ் ஒருநாள் மட்டும் டீசல் அடைப்புக் காரணமாக வழியில் தடைப்பட்டுள்ளது. இச் சேவை சீராகச் செயல்படவில்லை என்பது உண்மைக்கு மாறானது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-7)

## தீக்காயங்களுடன் மருத்துவமனையில் இளம் பெண் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை16

எரிந்துகொண்டிருந்த குக்கருக்கு எண்ணெய் விட்டபோது, எண்ணெய் பரவித் தீப்பற்றியதில், இளம் பெண் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளானார்.

கொக்குவில், நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் யோ. கௌசல்யா (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஒ-15)

### நாளை

ஆடி 1
செவ்வாய்க்கிழமை
திதி: ஏகாதசி
முற்பகல் 9.46 வரை.
நட்சத்திரம் : ரோகிணி
பின்இரவு 3.56 வரை.
ஆடிப்பிறப்பு
சுபநேரம் : 10.30 - 12.00
ராகுகாலம் : 3.00 - 4.30
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வேலை மனிதனைக் கொல்வதில்லை, கவலை தான் கொல்லும்.

# நீண்ட காலம் திருத்தப்படாத நிலையில் வதிரி மகளிர் கல்லூரி வீதி

வடமராட்சி,ஜூலை16

வதிரி பாடசாலை வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமையினால் அவ்வீதியால் நடந்தும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் சென்று வருவோரும் பெரும் சிரமங்களுடனேயே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியையும், உடுப்பிட்டி - மாலிசந்தி வீதியையும் இணைக்கும் இவ்வீதியால் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குமட்டுமன்றி வதிரியில் உள்ள வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு மாணவர்களும் நீதிமன்றத்துக்கு பொதுமக்களும் போக்குவரத்துச் செய்ய வேண்டியுள்ளது.

இவ்வீதிதிருத்தப்படாதது குறித்து சம்பந்தப்பட்டோர்களுக்கு தெரிவித்தும் எதுவித பலனும் கிட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-173)

### வாசகர்களின் கவனத்துக்கு!

இப்பகுதியில் பிரசுரிப்பதற்கு வாசகர்களிடமிருந்து தரமுள்ள ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.

ஓவியங்கள் 19 செ.மீ. X 14 செ.மீ. அளவில் வரையப்படவேண்டும்.

*அனுப்பவேண்டிய முகவரி:-*

*கண்ணிவெடி விழிப்புணர்வுப் பிரிவு.*
*மாவட்டச் செயலகம்.*
*யாழ்ப்பாணம்.*


மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி

# அமரர் தோழர்

# க. உமாமகேஸ்வரன்

அவர்களின்

# 12 ஆவது சிரார்த்த தினம்



சமுதாய சாக்கடையில்
நெளியும் மனிதப் புழுக்களுக்கு
புத்துணர்வூட்டி மனிதாபிமானமும்
மனிதநேயமும் தளிர்த்திடவும்
புரட்சியின் பால் புதியதோர் சமுதாயம்
மண்ணில் மலர்ந்திடவும்
செவ்வானம் வெளுக்குமுன்னே
செங்கொடியை நாட்டிட
செங்குருதி சிந்திய புரட்சி மலரே!
புரட்சியாளர்கள் என்றுமே
மண்ணில் புதைக்கப் படுவதில்லை
விதைக்கப் படுகின்றனரெனும்
விந்தைதனை உலகறியச் செய்தவனே!
வியர்வையும் கண்ணீரும்
மண்ணை நனைக்கும்
விவேகமும், வேகமும் விண்ணைத் தொடும்
வீரமும், தீரமும் மண்ணை மீட்கும்
தோழா! உன் லட்சியத்தில் உறுதிகொண்டு
நாமும், எந்த மொழியாலும்,
எந்த மதத்தாலும், எந்த ஜாதியாலும்
பிரிக்க முடியாத சமூக அமைப்பினை
நிறுவி சகோதரத்துவப் பயிரை
அறுவடை செய்வோம்.

தமிழர் உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த, பலியான தலைவர்கள், தளபதிகள், சகபோராளிகள், கழக கண்மணிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது இதய அஞ்சலிகள்!

## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF)

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)

(90338)

---

உவர்த்தன்மை ஏற்படுவதை அடுத்து

# குடிதண்ணீர் கிணறுகள் குறித்து விரிவான ஆய்வு நடத்த முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குடிதண்ணீர்க்கிணறுகள் தொடர்பாக விரிவான ஆய்வு ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

வலிகாமம் மேற்கிலும், யாழ். மாநகரப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட மிகப் பிந்திய ஆய்வுகளின் போது பல நன்னீர்க்கிணறுகள் உவர்த்தன்மை அடைந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு நன்னீர்க்கிணறுகள் பல வேகமாக உவர்த்தன்மை அடைவதைத் தடுப்பதற்கு மாவட்ட மட்டத்தில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கிணறுகள் தொடர்பாக விரிவான முறையில் ஆய்வு செய்து தகவல் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள கிராம அலுவலர்பிரிவு ரீதியாக இந்த விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைக்காக அந்தந்தப் பகுதியில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

(க-99)

## கிராம அபிவிருத்தி கருத்தரங்கு

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுமாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கான கிராம அபிவிருத்திக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளது.

சங்கங்களின் தலைவர், செயலாளர், அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. இராஜேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஐ-72)

## படுகாயம்

கள்சீவுவதற்காகப் பனை மரத்தில் ஏறியவர் தவறிக் கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

சங்கானை, நிச்சாமத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னையா திருநாவுக்கரசு (வயது 65) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-15)

# விசேட அ. அட்டைகளைப் பெற வலி.மேற்கு மக்கள் பெருஞ்சிரமம்

## இடத்துக்கிடம் மாறுபட்ட நடைமுறைகள்

மூளாய், ஜூலை 16

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதில் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விண்ணப்பம் செய்து நீண்ட நாள்களாகியும் பலருக்கு இதுவரை அடையாள அட்டை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படை அதிகாரிகளினால் அடையாள அட்டைகள்வழங்குவதற்கான பாதுகாப்பு அனுமதி வழங்குவதில் ஏற்படும் தாமதம் காரணமாகவே விசேட அடையாள அட்டைகளைப் பொது மக்கள் பெறுவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.

இவ் விடயத்தில்பாதுகாப்பு அனுமதி வழங்குவது தொடர்பாகபாதுகாப்புப் படையினர் இடத்துக்கு இடம் வெவ்வேறான நடைமுறைகளைப் பின்பற்றுவதாகவும், பல தடவைகள் பாதுகாப்புப் படையினரது முகாம்களுக்கு தாம் அலைந்துதிரிய வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

(க-99)

## சத்துணவு தொடர்பான கலந்துரையாடல்

கோப்பாய், ஜூலை 16

பாடசாலைகளில் சத்துணவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களும், பாடசாலைகளின் பெற்றோர்பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(ஐ-72)

---

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
25 - 04 - 1955



விண்ணில்
16 - 07 - 1996

## திருமதி மீனாம்பிகை பாக்கியநாதன்

(சட்டமாணியும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும், சத்திய ஆணையாளரும்)

அன்புத் தாயே! ஆண்டு ஐந்து சென்றாலும்
தினமும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:

அன்புக் கணவர்,
பிள்ளைகள்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(90019)

# இந்தியாவின் கடும் எதிர்ப்பை மீறி குரியத்துடன் முஷாரப் சந்திப்பு!

## மத்திய அரசின் அமைச்சர்கள் தேநீர் விருந்தை புறக்கணிப்பு

புதுடில்லி,ஜூலை16

**இந்தியாவின் பலத்த எதிர்ப்பையும் மீறி, காஷ்மீர் தீவிரவாத இயக்கங்களின் கூட்டமைப்பான குரியத் மாநாடுக் கட்சியின் பிரதிநிதிகளை பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் சந்தித்து உரையாடினார்.**

இந்தியாவுக்கான பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகரின் புதுடில்லி இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற தேநீர் விருந்தின் போது இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

குரியத் மாநாடு கட்சியைச் சேர்ந்த ஆறு பேர் அடங்கிய குழு ஒன்று சந்திப்பில் பங்கேற்றது. இந்தக் குழு, அதிபர் முஷாரப்புடன் சுமார் 20 நிமிடங்கள் பேச்சு நடத்தியது.

இதேசமயம், குரியத் தலைவர்களை ஜெனரல் பர்வேஷ் முஷாரப் சந்திப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் வழங்கிய தேநீர் விருந்தில் கலந்துகொள்ளாமல், அதனைப் புறக்கணித்தன. அத்துடன் மத்திய அமைச்சர்களும் தேநீர் விருந்தைப் புறக்கணித்திருந்தனர்.

பாகிஸ்தானிய அதிபர், இந்திய அரசின் அழைப்பை ஏற்று விஜயம் செய்வதால், காஷ்மீர் பிரிவினைவாத அமைப்பான குரியத் மாநாடு கட்சிப் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசுவது பொருத்தமற்ற செயல் என்று முன்னரேயே இந்தியா எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

ஜம்மு - காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்று இந்திய அரசு வலியுறுத்தி வரும் சமயத்தில், தமது அழைப்பை ஏற்று வரும் பாகிஸ்தானிய அதிபர், காஷ்மீரை தனிநாடு என்று கருதிப் போராடும் குரியத் மாநாடு கட்சியுடன் பேசுவது, அவர்களின் கருத்துக்கு வலிமை சேர்ப்பதாக அமைந்துவிடும் என்று எண்ணியே இந்தியா இந்தச் சந்திப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### உலக அரங்கில்

இதேசமயம், பலத்த சர்ச்சைகளுக்குள் இந்தியப் பயணத்தை மேற்கொண்டுள்ள முஷாரப், காஷ்மீர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுடனான சந்திப்பை நிராகரித்தால், பாகிஸ்தானில் தர்மசங்கடமான சூழ்நிலையை அவர் எதிர்கொள்ளவேண்டிவரும் என்பதாலேயே இந்திய அரசின் எதிர்ப்பை மீறி குரியத் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தியதாகக் கருதப்படுகிறது.

ஜெனரல் முஷாரப் இந்தியா வருவதாக ஒப்புக் கொண்ட நாள் முதலாக, அவர் குரியத் மாநாடு கட்சியின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் விடயம் முஷாரப் - வாஜ்பாய் பேச்சை சீர்குலைக்குமா என்று சந்தேகம் எழும் அளவுக்கு சர்ச்சைக்குரியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-9)



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் தனது துணைவியார் சகிதம் இந்தியாவின் தேசியத் தந்தையான மகாத்மா காந்தியின் சமாதியில் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தானியத் தலைவர்களில், காந்தி சமாதியில் அஞ்சலி செலுத்திய முதல் தலைவர் ஜெனரல் முஷாரப் என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரி பண்டிட் குற்றச்சாட்டு

புதுடில்லி,ஜூலை16

குரியத் மாநாடு கட்சியின் பிரதிநிதிகளை, பாகிஸ்தானியத் தூதர் வழங்கிய தேநீர் விருந்தில் சந்தித்ததன் மூலம், ஜெனரல் முஷாரப், இந்தியாவின் அழைப்பைத் தவறாகப் பயன்படுத்தியிருப்பதாக காஷ்மீரி பண்டிட்டுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அக்னி சேகர் கூறியுள்ளார்.

(ஒ)

## உலகின் கவனத்தை ஈர்த்த ஆக்ரா மாநாடு ஆரம்பம்!

ஆக்ரா,ஜூலை16

உலகின் கவனத்தை தன்பால் ஈர்த்துள்ள இந்திய - பாகிஸ்தான் உச்சி மாநாடு ஆக்ராவில் நேற்று ஆரம்பமானது.

'ஜேட்லி பலஸ்' ஹோட்டலில் நடைபெறும் இந்தப் பேச்சு கார்க்கில் போருக்குப் பின்னர் இரு நாடுகளிடையேயான முதல் உயர் மட்டச் சந்திப்பாகும்.

இந்தப் பேச்சின்போது,

காஷ்மீர் பிரச்சினை குறித்து முஷாரப் வலியுறுத்துவார் என்றும் -

எல்லை கடந்த தீவிரவாதம், குற்றவாளிகளை நாடு கடத்துதல் ஆகியவற்றை வாஜ்பாய் வலியுறுத்துவார் என்றும் - எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும், இரு தலைவர்களின் அரசியல் எதிர்காலங்களில் இந்த மாநாட்டின் வெற்றி தாக்கத்தை ஏற்படுத்த சாத்தியமிருப்பதால், பேச்சை சாதகமான நிலையில் முடிக்கவே இருவரும் விரும்புவதாகவும் கருதப்படுகிறது.

(ஒ)

## காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதி வழியிலேயே தீர்வு

### ஜெனரல் முஷாரப் உறுதி

புதுடில்லி,ஜூலை16

காஷ்மீர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியாதென்றும் - அமைதியான வழியில்தான் அது தீர்க்கப்பட வேண்டுமென்றும் -

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் வலியுறுத்தினார்.

ஆக்ரா உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியா வந்துள்ள ஜெனரல் முஷாரப்பை கௌரவித்து நேற்று முன்தினம் இரவு புதுடில்லியில் இந்திய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் அளித்த இரவு விருந்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

முஷாரப் மேலும் தனதுரையில்,

இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினையை நேரடியாக எதிர்கொண்டு நிரந்தரத் தீர்வு கண்டு இருதரப்பு உறவுகளில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் -


இரு நாடுகளிடையேயான உறவுகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான வழிமுறைகளைக் காண்பதில் தாம் உறுதியுடன் இருப்பதாகவும் - தெரிவித்தார்.

நடந்தவற்றை மறந்து, நல்லெண்ணம் மற்றும் கூட்டுறவு அடிப்படையில் புதிய உறவுகளை ஏற்படுத்துவதே, எதிர்கால சந்ததியினருக்கு இரு நாடுகளும் ஆற்றும் கடமையாகும் என்றும் அதிபர் முஷாரப் மேலும் தெரிவித்தார்.

(ஒ-9)

## அத்வானி - முஷாரப் சந்திப்பு

புதுடில்லி,ஜூலை16



இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி அதிபர் முஷாரப்பை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

எல்லை தாண்டி நிகழ்த்தப்படும் தீவிரவாதம் குறித்த இந்தியாவின் கவலையை அத்வானி அப்போது முஷாரப்பிடம் தெரிவித்தார்.


மும்பைத் தொடர் குண்டுவெடிப்புக்களிலும், வேறு பல சட்டவிரோதக் குற்றங்களிலும் சம்பந்தப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பல் தலைவர் தாவூத் இப்ராஹிமை இந்தியாவிடம் ஒப்படைக்கும் பிரச்சினை தொடர்பாகவும் அத்வானி பேசினார்.

அதிபர் முஷாரப் தனது இந்தியப் பயணத்தின் முதல்நாளான நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாய், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரையும் தனித்தனியே சந்தித்துப் பேசினார்.

(ஒ-9)

## பேகம் முஷாரப்புடன் கலந்துரையாடல்

புதுடில்லி,ஜூலை16



அதிபர் முஷாரப்புடன் இந்தியா வந்துள்ள அவரது துணைவியார் பேகம் ஷியபா முஷாரப், பிராந்திய அமைதி மற்றும் மேம்பாடு குறித்து இருநாட்டுப் பெண்ணியல் அமைப்புக்களுடன் கலந்துரையாடல் நிகழ்த்தினார்.

'தெற்காசியாவில் அமைதிக்கான பெண்களின் முன் முயற்சி' என்ற அமைப்பு புதுடில்லியில் நேற்று முன்தினம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் குறித்து பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் திட்டங்கள் பற்றி பேகம் முஷாரப் கலந்துரையாடலில் விளக்கினார்.

(ஒ-9)

## பாகிஸ்தானின் தற்காலிக அதிபர்

இஸ்லாமாபாத்,ஜூலை16

பாகிஸ்தானின் தற்காலிக அதிபராக, தலைமை நீதிபதி இப்தாஸ் ஹுதன்ஹான் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் நாட்டில் இல்லாத காலத்தில் இப்தாஸ் ஹுதன்ஹான் தற்காலிக அதிபராக செயற்படுவார்.

(ஒ)

## 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி சீனாவில்

மொஸ்கோ,ஜூலை16

2008ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெறவுள்ளது.

ரஷ்யாவில் நேற்று முன்தினம் கூடிய சர்வதேச ஒலிம்பிக் சங்கம் நடத்திய வாக்களிப்பில் பெய்ஜிங்கில் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு அதிக ஆதரவு கிடைத்தது.

சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாக சர்வதேச சமூகம் கவலை தெரிவித்தபோதும் சீனாவுக்கு ஆதரவு அதிகமிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-4)

### கருணாநிதி கைது விவகாரத்தில்

## மத்திய அரசின் எச்சரிக்கை சட்டத்துக்குப் புறம்பானது

### என்கிறார் ஜெயலலிதா

சென்னை,ஜூலை16



திமுக தலைவர் கருணாநிதி மற்றும் 2 மத்திய அமைச்சர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக மாநில அரசுக்கு மத்திய அரசு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியது சட்டவிரோதமானது என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இத்தகைய எச்சரிக்கைக் கடிதம் அனுப்புவதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் -

மாநில அரசொன்றுக்கு மத்திய அரசு இப்படிப்பட்ட எச்சரிக்கைக் கடிதம் அனுப்புவது முறையற்றது என்றும் -

அவர் குறிப்பிட்டார்.

மத்திய, மாநில அரசுகளின் உறவுகளைப் பேணுவதற்காகவே, மத்திய அரசின் எச்சரிக்கைக் கடிதத்துக்கு மாநில அரசு விளக்கம் அனுப்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஒ-9)

## பெண்ணின் கவர்ச்சியால் ஸ்தம்பித்த மொராக்கோ நாடாளுமன்றம்

ரபாட்,ஜூலை16

'டெனிம்' ஜீன்ஸ் மற்றும் 'ரி-சேர்ட்' அணிந்த பெண்ணின் கவர்ச்சியால், மொராக்கோ நாடாளுமன்றம் சுமார் ஒரு மணிநேரம் அலுவல்களை நடத்த முடியாது ஒத்திப் போடப்பட்டது.

இந்த சுவாரஸ்யமான சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது-

மொராக்கோ நாட்டின் அரசுத் தொலைக்காட்சியான 2எம் - நிறுவனத்தைச் சேர்ந்த படப்பிடிப்புக் குழுவினர் அந்த நாட்டு நாடாளுமன்ற விவாதங்களை படம் பிடித்துக் கொண்டிருந்தனர். அமினா கபாப் என்ற 32 வயதுப் பெண் ஒளிப்பதிவுக் கருவியை இயக்கிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில், இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சியான நீதி மற்றும் அபிவிருத்தி கட்சித் தலைவர் அப்துல்லா பென்கிரன், 'ரி-சேர்ட்' மற்றும் 'டெனிம் ஜீன்ஸ்' அணிந்திருந்த அமினாவை சுட்டிக் காட்டி உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் அவர் உடையணிந்திருப்பதாகவும் -

ஆண்களை தவறான வழிகளுக்கு விடுக்கும் அழைப்பாக அந்த உடை அமைந்திருப்பதாகவும் - குற்றஞ்சாட்டினார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு சபை அலுவல்கள் ஒரு மணித்தியாலம் ஸ்தம்பித்தன.

இறுதியில் சபாநாயகர் தலையிட்டு, நாடாளுமன்றத்தில் செய்தியாளர்கள் சுதந்திரமானவர்கள். அவர்களை கட்டுப்படுத்த முடியாது என்று கூறியதை அடுத்து சபை தொடர்ந்து இயங்கியது.

(ஒ)

### பலநாடுகளின் எதிர்ப்புக்கிடையில் நடந்த

## ஏவுகணை பாதுகாப்பு சோதனை வெற்றி என்கிறது அமெரிக்கா

வாஷிங்டன்,ஜூலை16

தனது ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டப் பரிசோதனையில் வெற்றியடைந்திருப்பதாக அமெரிக்கா நேற்று அறிவித்தது.

பசுபிக் கடலுக்கு மேலே கிட்டத்தட்ட 240 கிலோமீற்றர்கள் உயரத்தில் போலி அணு ஆயுத ஏவுகணையை அழிக்கும் பொருட்டு ஏவப்பட்ட சோதனை ஏவுகணை, வெற்றிகரமாக குறித்த போலி அணு ஆயுத ஏவுகணையைத் தாக்கி அழித்ததாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது. நேற்று முன்தினம் இரவு இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் இந்த ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்துக்கு, ரஷ்யா,சீனா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் எதிர்த்துள்ளன. நடைமுறையில் உள்ள ஒரு அணு ஆயுதத் தடுப்பு உடன்படிக்கையை அமெரிக்காவின் ஏவுகணைப் பாதுகாப்பு முறை மீறுவதாக அந்த நாடுகள் குற்றம்சாட்டியுள்ளன.

(ஒ)

# கப்பம் கிடைக்காததால் குழந்தையை கிணற்றில் வீசிக் கொன்ற கும்பல்!

## மினுவாங்கொடையில் அதிர்ச்சியூட்டும் சம்பவம்

கொழும்பு,ஜுலை16

மினுவாங்கொடைப் பகுதியில் வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கோரிய கோஷ்டி ஒன்று கப்பம் கிடைக்காத நிலையில் அவரது ஒன்றரை மாதக் குழந்தையை வீட்டுக் கிணற்றில் வீசிக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

அதிர்ச்சியூட்டும் இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நிமல்ரஞ்சித் என்ற வர்த்தகரிடம் 10 லட்சம் ரூபா பணம் கேட்டு இனந்தெரியாத சிலர் தொலைபேசியில் மிரட்டி வந்துள்ளனர். எனினும் இதற்கு அவர் இணங்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 'பிக்கப்' வாகனம் ஒன்றில் இவரது வீட்டுக்குச் சென்ற நான்குக்கும் மேற்பட்டவர்கள வீட்டில் இருந்த மனைவியை 10 லட்சம் ரூபா பணம் தரவேண்டும் எனவும் இல்லையேல் கொன்று விடுவோம் எனவும் மிரட்டியுள்ளனர்.

மனைவி இதற்கு இணங்க மறுகவே அவரைக் கடுமையாகத் தாக்கியதால் அவர் மயக்கமடைந்துள்ளார்.

இவ்வேளையில், தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த அவர்களது ஒன்றரை மாதப் பெண் குழந்தையை (லக்ஷானி) தூக்கிச் சென்று அவர்களது வீட்டுக் கிணற்றினுள் வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். மயக்கம் தெளிந்த பின்னர் அயலவர்களது உதவியுடன் குழந்தையைத் தேடியும் காணாத நிலையில் வெள்ளிக்கிழமை அதிகாலை குழந்தையின் சடலம் வீட்டுக் கிணற்றில் மிதந்ததைக் கண்டுபிடித்துள்ளனர்.

சம்பவம் நடைபெற்றபோது வர்த்தகர் வீட்டில் இருக்கவில்லை.

(க)


## யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2001

காலம்:- 21.07.2001 சனிக்கிழமை காலை 10.00மணி (இ.நே)
இடம்:- வை.எம்.சி.ஏ. மண்டபம், கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
தலைவர் :- **திரு.வீ.குமாரசாமி** அவர்கள்.
பிரதம விருந்தினர் :- **திரு.க.சண்முகநாதன்** அவர்கள் (அரச அதிபர்)
**திரு.செ.சண்முகநாதன்** அவர்கள் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)
சிறப்பு விருந்தினர் :- **திரு.க.பாலச்சந்திரன்** அவர்கள் (முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
**திரு.ந.யோகேந்திரராசா** அவர்கள் (கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்)

#### நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்.
02. வரவேற்புரை.
03. தலைமையுரை.
04. செயலாளர் அறிக்கை.
05. கணக்கறிக்கை.
06. பதிவுக்கட்டணம் அதிகரிப்புக்கு அங்கீகாரம் பெறல்.
07. விவரமற்ற கொடுப்பனவு ரூபா ஆறாயிரம் அறவீடு செய்வது பற்றிய தீர்மானம்.
08. சிறப்புவிருந்தினர் உரை.
09. பிரதம விருந்தினர் உரை.
10. புதிய நிர்வாகத் தெரிவு.
11. நன்றியுரை.

*சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.*

குறிப்பு:- அங்கத்தவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவார்கள்.

*215, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (90122)

இ.அரிகரன்
கௌரவ செயலாளர்.



## பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான காணி கையளிப்பு வைபவம்

பருத்தித்துறை பிரதேச செயலகம் அமைப்பதற்கு பொதுமக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பண உதவி மூலம் பருத்தித்துறை பிரதான வீதியில் இ.போ.ச. அருகில் அமைந்துள்ள காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இக்காணியை வைபவ ரீதியாக 18.07.2001 புதன்கிழமை காலை 10.00மணிக்கு, மேற்படி காணியில் அமைக்கப்பட்டுள்ள வரவேற்பு மண்டபத்தில் யாழ் அர சாங்க அதிபர் திரு.க.சண்முகநாதன் அவர்களிடம் கையளிக்கப்ப டும்.

பொதுமக்கள் அனைவரையும் இவ் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காணி கொள்வனவுக் குழு,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

(C-17438)



## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது கல்வியியற் கல்லூரியின் 2ஆம் வருட ஆசிரிய மாணவி
செல்வி கு.கார்த்திகாயினி அவர்களின்
பாசமிகு தந்தையார்

### அமரர் எஸ்.குணரட்ணம்

அவர்கள் இயற்கை எய்தியமையையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருடன் சேர்ந்து நாமும் துயர்பகிர்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், யாழ்ப்பாணம்.* (90123)

பீடாதிபதி, உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்.


## மாதாந்த உதவிப்பண கொடுப்பனவுகள்

நவாலி,ஜுலை16

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய், யானைக்கால்நோய் என்பவற்றிற்கான உதவிப் பணத்தைப் பெறுபவர்களினதும் ஜுலை மாதக் கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-100)

## மலத்தியன் தெளிக்க ஏற்பாடு

வடமராட்சி,ஜுலை16

பருத்தித்துறை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு மலத்தியன் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மந்திகை அரசினர் சுகாதார வைத்தியசாலை, வரணி அரசினர் மத்திய மருந்தகம் ஆகியவற்றில் இந்த மலத்தியன் பெட்டிகள் தற்போது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, சாவகச்சேரி பிரிவுகளில் மலேரியா காணப்படும் பகுதிகளில் மலத்தியன் தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

(க-173)

## அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜுலை16

எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த அனுமதி அட்டைகள் இன்று காலை முதல் யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரிகளிலுள்ள நிலையங்களில் வைத்து வழங்கப்படும் என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார். (ம-3)

## பிள்ளைகளுக்கு நஞ்சு பருக்கிவிட்டு தந்தை தற்கொலை!

அராலிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை தந்தை ஒருவர் தனது இரு பிள்ளைகளுக்கும் நஞ்சைப் பருக்கி விட்டு தானும் அதனைப் பருகி உயிரை மாய்த்துக்கொண்டார். எனினும் இரு பிள்ளைகளும் உயிர் தப்பியுள்ளனர்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிதம்பரநாதன் (வயது 45) என்பவரே இவ்வாறு உயிரை மாய்த்தவராவார்.

அவரது இரு பிள்ளைகளான சி.பிரயாணன் (வயது 13), சி.கலைவாணி (வயது 16) ஆகியோர் ஆபத்தான நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ம-3)

## தேர்முட்டிக்கு அடிக்கல் நடுகை

வலி.வடக்கு,ஜுலை16

மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலயத்திற்கான புதிய தேர்முட்டி அமைப்பதற்கான அடிக்கல்லை நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் கடந்த வெள்ளிக்கிழமை நட்டுவைத்தார்.

ஏழு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இத் தேர்முட்டிக்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 5 லட்சம் ரூபா வழங்கியுள்ளது. (க-86)

## அல்லைப்பிட்டியில் ஈ.பி.டி.பி. அலுவலகம்

யாழ்ப்பாணம்,ஜுலை16

அல்லைப்பிட்டியில் ஈ.பி.டி.பியின் புதிய அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத் திறப்பு விழாவில் அல்லைப்பிட்டி ஈ.பி.டி.பி. அலுவலகப் பொறுப்பாளர் ஏபிரகாம், தீவக உதவிப் பொறுப்பாளர் காந்தன் மற்றும் ஈ.பி.டி.பி. பிரமுகர் நெப்போலியன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-4)

# கல்விச்சாலைக் காட்சிகள்



ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வலி.கிழக்கு பிரதேச சபை உப தலைவர் யு.எல்.ஏ.ரவி பரிசில்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ம)



தும்பளை கிழக்கு உதயசூரியன் பாலர் பாடசாலைச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு பருத்தித்துறை பிரதேச சபை உப தலைவர் ப.ரவீந்திரன் பரிசில் வழங்குவதையும், ஆசிரியை ம.வனிதா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (ம-11)



சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தமிழ்விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவன் ஜீ.ஆதவனுக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ம-11)



அச்சுவேலி மத்திய கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அருணகிரிராஜா மாணவி ஒருவருக்கு கேடயம் பரிசளிப்பதைப் படத்தில் காணலாம். (ம)

# வர்த்தக உலகில்

# இலத்திரனியல் புரட்சி!

உலகம் சுருங்கி வருகிறது. எப்போதும் உலகளாவிய ரீதியில் கவனத்தில் கொள்ளத்தக்க, தொழில்நுட்ப ரீதியான மாற்றங்களும் அபிவிருத்திகளும் இடம்பெற்ற வண்ணமேயிருக்கின்றன. இதனால் எந்தவொரு தனிநபரோ அல்லது வியாபார நிறுவனங்களோ இந்த மாற்றங்களுக்கும் அபிவிருத்திகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகவே அமைகின்றது. எனவே இத்தகைய தொழில்நுட்ப ரீதியான அபிவிருத்திகள், மாற்றங்கள் பற்றி தெளிவாக விளங்கிக் கொண்டு அம்மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் தன்னகத்தே உள்வாங்கிக்கொண்டு செயற்படுகின்ற நிறுவனங்களே வெற்றிகரமாகத் தொழிற்பட முடியும். மாறாக இவ்விதம் செயற்படத் தவறும் நிறுவனங்கள் தமது வெற்றிப் பாதையிலிருந்து விலகி தோல்வியைத் தழுவிக்கொள்வதுடன் நடைமுறை உலகில் இருந்து நெடுந்தூரம் விலகிச் சென்று விடுகின்றன. இந்த அடிப்படையில் தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் அனைவரதும் கவனத்தையும் ஈர்த்துள்ள இலத்திரனியல் வர்த்தகம் அல்லது மின்வர்த்தகம் (Electronic Commerce/ E-Commerce) என்பது என்ன? அதன் சிறப்பியல்புகள், வகைகள், நன்மைகள், தீமைகள் பற்றியும் அறிந்து கொள்வது மிகப் பொருத்தப்பாடுடையதொன்றாகும்.

**இலத்திரனியல் வர்த்தகம் என்றால் என்ன?**

இலத்திரனியல் வர்த்தகம் அல்லது மின்வர்த்தகம் என்பது பொருள்களினதும் சேவைகளினதும் தரத்தையும், விநியோக விரைவுத் தன்மையையும் உயர்த்தும் அதேவேளையில் செலவினங்களைக் குறைப்பதற்கும் வியாபார நிறுவனங்களுக்கும், வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் உள்ள தேவைகளுக்கு முகங்கொடுக்கும் வியாபார முறைமை ஆகும். இதை வாங்குவோரும் விற்போரும் தமது கொடுக்கல் வாங்கல்களை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ மேற்கொள்ள இடமளிப்பதற்கு வலையமைப்புக்களுடன் கூடிய கணனிச் செயற்பாடுகளை அல்லது பிரயோகங்களைப் பயன்படுத்துதல் என எளிதாக வரையறுக்கலாம்.

இன்னொரு வகையில் கூறினால் இலத்திரனியல் வர்த்தகம் என்பது மின்னணுக் கருவியின் உதவியுடன் இணையத்தின் (Inter net) ஊடாகப் பொருள்களைக் கொள்வனவு செய்வதையும் விற்பனை செய்வதையும் கருதி நிற்பதாக அமைகின்றது.

**இலத்திரனியல் வர்த்தகத்தின் சிறப்பியல்புகள்**

சாதாரணமாக நடைபெறுகின்ற கொள்வனவு விற்பனை செயற்பாடுகளிலிருந்து மின்வர்த்தகம் வேறுபட்டதாக பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டமைகின்றது.

★ விற்பனை செய்யும் கம்பனிகள் (பொருள்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்யும்) தமது பொருள் அல்லது சேவையை இணையத்தில் (Inter net) விளம்பரப்படுத்தி நுகர்வோரை அதை வாங்குவதற்கு தூண்டமுடியும். அதாவது உலகின் எந்த மூலையிலும் இருக்கும் வாடிக்கையாளர் அல்லது கொள்வனவாளரைத் தூண்டமுடியும். இங்கு சந்தை விரிவடைகின்றது.

★ நுகர்வோன் அல்லது கொள்வனவாளன் ஒருவன் ஒரு பொருளைத் தெரிவுசெய்து தனக்கு அதை விநியோகிக்கும்படி ஒரு கட்டளையை அனுப்பமுடியும். இதற்காக நுகர்வோன் அல்லது கொள்வனவாளன் சந்தையின் அமைவிடத்துக்கு (Market place) போக வேண்டிய தேவையில்லை.

கொள்வனவாளரைப் பொறுத்தவரை அல்லது நுகர்வோரைப் பொறுத்தவரை உலகின் எந்த மூலையில் விற்பனைக்குள்ள பொருள்களாயிருந்தாலும் அவற்றை இலத்திரனியல் வர்த்தகத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். உதாரணமாகப் புத்தகங்கள், இறுவட்டுக்கள் (CD), நகைகள், உடைகள், வாகனங்கள், மரக்கறிகள், இறைச்சி வகைகள் ஆகியவற்றைக் கூட வீட்டிலிருந்தே ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

★ கொள்வனவாளர் அல்லது நுகர்வோர் நேரத்தையும் செலவையும் குறைத்துக் கொள்ளமுடியும். ஏனெனில் இம்முறையில் நேரத்தைச் செலவிட்டு பல கடைகளுக்கு ஏறி, இறங்கி மிகவும் களைப்புற்று, கடையில் பல மணி நேரம் காத்திருந்து, பொருள்களைக் காவிச் செல்ல வேண்டிய தேவையில்லை.

★ விற்பனையாளரைப் பொறுத்து அவர்கள் தமக்குடைமையான வீடுகள், நிலங்கள், அசையும் ஆதனங்கள் (மோட்டார் வாகனம், கார், லொறி) போன்றவற்றைக் கூட ஏல விற்பனை மூலம் கூடிய விலைக்கு இம்முறை மூலம் விற்க முடியும்.

**எவ்வாறு இலத்திரனியல் வர்த்தகத்தில் ஈடுபடலாம்?**

இலத்திரனியல் வர்த்தகத்தில் ஈடுபடவேண்டுமாயின் முக்கியமாக இணைய இணைப்புள்ள (Inter net Connection) கணனி இருத்தல் வேண்டும். இவ்விதம் இணைய இணைப்புள்ள கணனியைப் பயன்படுத்தி தேவையான இணையப் பக்கங்களுக்குள் புகுந்து இலத்திரனியல் வர்த்தகத்தில் ஈடுபடலாம்.

இலத்திரனியல் வர்த்தகத்தில் பல்வேறு பொருள்கள் பல்வேறு வகை, தரம் என்பவற்றில் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்படுகின்றன. இவற்றில் தேவையான பொருள்களின் வகை, தரம் என்பவற்றுக்கேற்ப கொள்வனவாளன் அல்லது நுகர்வோன் தெரிவு செய்து கொள்வனவு செய்து கொள்ள முடியும். இவ்விதம் தேவையான பொருள்களைத் தெரிவு செய்து வாங்குவது "Online Shopping" எனப்படுகிறது.

**மின்வர்த்தகத்தில் எவ்விதம் பணம் செலுத்தலாம்?**

மின்வர்த்தகத்தில் ஈடுபட்டு பொருள்களைக் கொள்வனவு செய்வோர் அதற்கான பணக்கொடுப்பனவை முதலில் கடனட்டைகள் (Credit cards) மூலமே மேற்கொண்டனர். ஆயினும், இப்போது கடனட்டை மூலமான கொடுப்பனவுக்கு மேலதிகமாக இலத்திரனியல் நிதி நகர்வு அடிப்படையிலான புதிய சில யுக்திகளை மேற்கொண்டும் பணப்பரிமாற்றத்தினை அபிவிருத்தி செய்ய முயற்சி நடைபெறுகிறது.

**மின்னியல் வர்த்தகத்தின் பிரிவுகள் அல்லது வகைகள்**

இலத்திரனியல் வர்த்தகத்தை அடிப்படையில் 3 வகைகளாக வகுக்கலாம். அவையாவன:-

1. நுகர்வோருக்கான மின்னியல் வர்த்தகம். (Business to Consumer e-commerce)

2. வியாபாரங்களுக்கான மின்னியல் வர்த்தகம் (Business to Business e-commerce)

3. உள்ளக நிறுவன அமைப்புக்கான மின்னியல் வர்த்தகம் (Intra - organizational e-commerce)

**நுகர்வோருக்கான மின்வர்த்தகம்**

**(Business to Consumer e-commerce) (B2c e-com)**

இதன் மூலம் கருதப்படுவது யாதெனில் இணையப் பரப்பில் B2c எனப்படும் நுகர்வோருக்கான இலத்திரனியல் வர்த்தகமானது வியாபார நிறுவனங்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் இடம்பெறுகின்றது. இந்த வகையிலான மின்வர்த்தகத்தை உயர்ந்த முகக்குறிப்பு அல்லது தோற்றப்பாடுடையதாகவும் (High Profile) ஊடகங்களில் மேலாதிக்கம் செலுத்துவதாகவும் (media dominating) குறைந்த வருமானத்தைத் தருவதாகவும் (Low Revenue generating) விளம்பரத்தால் ஆதரவுத் தேவைகளைக் (Needs Support of Advertising) கொண்டதாகவும் குறிப்பிடலாம்.

இங்கு நுகர்வோருக்கான பாதுகாப்பும், வியாபாரிகள் செய்யும் மோசடிகளைக் கண்டறிதலும் முக்கியமான சிறப்பம்சங்கள் ஆகும். நுகர்வோருக்கான நேரம், பணம் ஆகிய இரண்டையும் மீதப்படுத்தும் அதே வேளையில் கிடைக்கின்ற வாய்ப்பிலும், கட்டுப்பாடுகளை மேற்கொள்வதிலும், தெரிவுசெய்தலிலும் இதன் வெற்றி தங்கியுள்ளது.

**இம்முறை மூலம் நுகர்வோர் பெறும் நன்மைகள்**

இந்த வகையிலான இலத்திரனியல் வர்த்தகம் பின்வரும் நலன்களை நுகர்வோருக்கு வழங்குகிறது.

★ விலையும் விநியோகச் செலவும்:- விலையும் விநியோகச் செலவும் பொதுவாகக்(Price and Cost of delivery) குறைவாகவே காணப்படும்.

★ தேவையை நிறைவு செய்வதிலான விரைவுத் தன்மை (Speed of fulfilment)

★ பரந்தளவிலான தெரிவுகளை மேற்கொள்ளும் வாய்ப்பு (Scope of Selection)

★ கொள்வனவு செய்யும் அளவு அல்லது கொள்வனவு உள்ளடக்கம் (Purchasing Content)

★ பொருள்களை வாங்கக கடைக்குச் செல்லவேண்டியதில்லை. (Pleasure of Shopping)

**இம்முறை மூலம் விற்பனையாளர் அல்லது வியாபார நிறுவனம் பெறும் நன்மைகள்**

இந்த வகையிலான இலத்திரனியல் வர்த்தகத்தை நடைமுறைப்படுத்துவதில் வியாபாரிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு பின்வரும் நலன்கள் கிடைக்கும்.

★ உலகளாவிய ரீதியில் நுகர்வோரைக் கொண்டிருக்க முடியும். அல்லது உலகளாவிய ரீதியில் பார்வையாளரைக் கொண்டிருக்க முடியும்.

(World - Wide Audience or World - Wide Consumers)

★ எந்நேரமும் சேவையை வழங்க முடியும் (Round the clock)

★ உயர்ந்தளவிலான இலக்கு சந்தைப்படுத்தல் (Highly targeted marketing)

★ செலவினங்களை இழிவுபடுத்தல் (Reduction in Costs)

" குறைந்தளவான ஆபத்தையே எதிர்கொள்ளல் (Lowered risk)

**வியாபாரங்களுக்கான மின்வர்த்தகம்**

**(Business to Business e-commerce) (B2B e-com)**

இங்கு B2B e-com என்ற சுருக்கக் குறியீட்டின் மூலம் அழைக்கப்படும் வியாபாரங்களுக்கிடையிலான இலத்திரனியல் வர்த்தகம் வியாபார நிலையங்களுக்கிடையில் மட்டும் இடம்பெறுகிறது.

பணக்கொடுக்கல் வாங்கல்கள் அடங்கலாக வியாபாரங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களும் அவற்றை நிறைவு செய்தலும் இவ்வகை இலத்திரனியல் வர்த்தகத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறது. வலையமைப்புகளூடாக மேற்கொள்ளப்படும் பெருந்தொகையான வர்த்தகத்தை இது உள்ளடக்குகின்றது. இந்தவகையான இலத்திரனியல் வர்த்தகம் ஒப்பந்தரீதியான உறவுகளை நிறுவுவதில் தங்கியுள்ளதுடன் வியாபாரப் பங்காளிகளுக்கு (Business partners) மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வலையமைப்புக்கள் பல்வேறு வகையான வர்த்தகப்பங்காளிகளை (Various Business partners) அவர்கள் இணையத்தினூடாக ஒருவருடன் ஒருவர் இணைந்து செயற்படுவதற்கும், ஒருவருடன் ஒருவர் வியாபாரத்தை மேற்கொள்ளவும் இடமளிக்கிறது. இவ்வலையமைப்புக்கள் பல்வேறு வகையான வர்த்தகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றைக் காலத்துக்கேற்ப நவீனமயப்படுத்துவதற்கும் வேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கும்(Update) உதவுகிறது. இந்த வலைஅமைப்புக்களிலிருந்து ஆகப் பிந்திய வர்த்தகச் செய்திகளை (The Latest Business News) பெற முடியும். வர்த்தக நோக்கத்திற்காக இந்த வலையமைப்புக்களில் ஒன்றுக்கோ அல்லது அதற்கு மேற்பட்டதற்கோ பெரும்பாலான கம்பனிகள் சந்தா (Subscribe) செலுத்துகின்றன. அதாவது இணையப் பக்கங்களுக்காக சந்தா செலுத்துகின்றன.

**உள்ளக நிறுவன அமைப்புக்கான மின்வர்த்தகம்**

**(Intra organizational E - Commerce -B2E)**

இவ்வகை மின்வர்த்தகம் இணையச் சூழலில்(The Internet environment) நிறுவனத்தினுள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது B2E (Business to Employee e - commerce) என அழைக்கப்படலாம். இந்த வகையான இலத்திரனியல் வர்த்தகமானது நிறுவனங்களுக்குள்ளேயே மேற்கொள்ளப்படும் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடையது. குறிப்பிட்டுக் கூறுவதானால் உள்ளக வர்த்தகத்தை தனிப்பட்டவர்களுக்கும் தொழில் பகுதிகளுக்கும் அதனோடு இணைந்த நிறுவனங்களுக்குமிடையிலான உள்ளக வர்த்தக செயல்முறைகளுக்கு உதவுவதற்கான வழிமுறைகளையும் அவற்றுக்குப் பொருத்தமான தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துதல் என வரையறுக்கலாம். இங்கு பொருள்களின் ஆகக்குறைந்த விலையை நிர்ணயிப்பதற்கு (Zero Lentency enter price) அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான செயல்முறையை எளிதாக்குவதில் - மிகுந்த கவனம் செலுத்தப்படல்வேண்டும். இதற்காக இணையங்கள் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றன.

**மின்வர்த்தகத்தின் பிரயோகங்கள்**

**(Applications of E-Commerce)**

இலத்திரனியல் வர்த்தகத்தை பிரயோகிக்கும் சில துறைகளின் எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

★ வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்(Supply Chain Management)

★ கேட்டதும் காட்டும் முறை (Video - on - demand)

★ தொலை வங்கியியல் (Remote Banking)

★ பங்குக்கொள்வனவும் பொருள கொள்வனவும் (Procurement & Purchasing)

★ இணைப்புள்ள சந்தைப்படுத்தலும் விளம்பரப்படுத்தலும் (On - line Marketing and advertising)

★ வீட்டிலிருந்தான பொருள் கொள்வனவு (Home Shopping)

**முடிவுரை**

வியாபாரத்தில் எப்பொழுதும் வளர்ச்சியடைந்து வரும் போட்டியுடன் இலத்திரனியல் வர்த்தகத்தின் பரிணாம வளர்ச்சியை தொடர்புபடுத்தலாம். இந்த வர்த்தக நிறுவனங்கள் நுகர்வோரைச் சென்றடைவதற்கு மேலும் மேலும் கூடுதலான நுட்பங்களை, வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதற்கு முயல்கின்றன. இணையத்தின் பரந்தளவிலான ஏற்றுக் கொள்ளும் தன்மை காரணமாக வியாபார நிலையங்கள் ஒருவரின் படுக்கையறைக்குள் நுழைவதற்கு அதே வழியைப் பின்பற்றுகின்றன. (Because of the widespread acceptability of the inter net, business houses followed the same path to break into a person's bedroom). மேலும் மேலும் கூடுதலான மக்களைச் சென்றடைவதற்கு வியாபார நிறுவனங்களுக்கிடையிலான போட்டியின் விளைவே இலத்திரனியல் வர்த்தகமாகும்.

இலத்திரனியல் வர்த்தகத்தின் இலக்குகளில் செலவினக் குறைப்பு (Reduction in Cost), உற்பத்தி சுழற்சி நேரக்குறைப்பு (Lower Product cycle times), விரைவானதும் சிறந்ததுமான


**ச.இராகவன்**

முகாமைத்துவக் கற்கைகள்
இறுதிவருடம்
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.


வாடிக்கையாளர் தொடர்புகள் (Faster and better Customer relations), மேம்படுத்தப்பட்ட தரமான சேவை (Improved Service Quality), காகித வேலைக் குறைப்பு (reduced Paper work), மேம்படுத்தப்பட்ட தன்னியக்க முறைமை (improved automation system) ஆகியன அடங்கும். இலத்திரனியல் வர்த்தகத்தின் நோக்கத்தில் ஏற்படும் விரிவாக்கத்துடன் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பவியலும் விரிவடைந்து வருகிறது. இபபோது இலத்திரனியல் வர்த்தகத்தில் வலைப்பின்னலால் செயற்படும் எல்லா மூல வர்த்தக செயல்முறைகளும் திறமைகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு வர்த்தகச் செயல்முறையின் தந்திரோபாய மாற்றுவழிகள் அடங்குகின்றன. இவற்றை தொழில்நுட்பங்கள் சாத்தியமாக்குகின்றன. இலத்திரனியல் வர்த்தகமானது முற்றிலும் புதிய வியாபார வழிமுறைகளின் அபிவிருத்தியுடன் வர்த்தக செயல்முறையின் போக்கில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல் வர்த்தகச் செயல்முறைகளை வடிவமைப்பதிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அடிப்படையில் இன்று இணையத்துடன் பலராலும் பேசப்படுவது இலத்திரனியல் வர்த்தகமாகும். "இணையத்தில் எதிர்காலத்தில் அதிக தாக்கத்தை விளைவிக்கக்கூடியதும் பெரும் இலாபத்தை கொடுக்கக்கூடியதுமான தொழில்நுட்பம் எது?" என சமீபத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் 'மைக்ரோ சொப்ற்' (Micro Soft) நிறுவனத்தின் உரிமையாளரான பில்கேட்ஸிடம் கேட்டபோது, அவர் அதற்கு 'E - Commerce, e-com' எனப் பதிலளித்தார். இந்த அடிப்படையில் மின்வர்த்தகத்தின் முக்கியத்துவம் இன்று அனைவராலும்

(8ஆம் பக்கம் பார்க்க)




**பெருமதிப்புடன் நன்றி கூறி**

**பாராட்டுகின்றோம்**

நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயம் பழைமை வாய்ந்து அழகு குன்றிப் பெருந் திருத்த வேலைகளுக்கு உட்பட்டிருந்த வேளையில், எமது ஆலய திருத்த வேலைகளுக்கு நிதி வழங்கி எமது ஆலயத்தை மெருகூட்டுவதற்கு அன்புக் கரம் நீட்டிய

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு-கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சரும்
ஈ.ம.ஜ.கட்சி செயலாளர் நாயகமுமான
மாண்புமிகு அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

*அவர்களையும்,*

யாழ்.மாவட்ட ஈ.ம.ஜ.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

**கா.வே.குகேந்திரன் (ஜெகன்)** *அவர்களையும்*

பெரும்மதிப்புடன் உளங்கனிந்து நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்.

அத்துடன்

ஈ.ம.ஜ.கட்சியின் தீவகங்களின் அமைப்பாளரும்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்
ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான

**உயர்திரு. ந.மதனராசா (மனோ)** *அவர்களையும்,*

நெடுந்தீவு ஈ.ம.ஜ.கட்சி அமைப்பாளரும்,
சுன்னாகம் பிரதேச சபை உப தலைவருமாகிய

**தோழர் திரு. கே.நவநீதன் (மோகன்)** *அவர்களையும்*

உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் சேவை மென்மேலும் சிறப்புற அமைய புனித அந்தோனியாரின் ஆசி வேண்டி எமது இதய பூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நெடுந்தீவு கிழக்கு,*
*நெடுந்தீவு.*

புனித அந்தோனியார் ஆலயசபையும்,
பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும். (90021)

# நிப்பொன் (NIPPON)
குளிர் / சூடான நீர் வழங்கி
**Hot & Cold Water Dispenser**

சூடான தேநீர், கோப்பி மற்றும் குளிர்பானங்களை இலகுவில் தயாரிக்கலாம்

**Light Duty வகை**
- இலகுவானதும் கவர்ச்சிகரமானதும்
- 3 கலன் நீர் கொள்கலனுடன் கூடியது.
- அலுவலகம், வீடுகளில் பாவிக்கக் கூடியது
- எவ்வேளையிலும் குளிர் / சூடான நீரை பெறமுடியும்
- வெப்பநிலை மாற்றிக் கொள்ள கூடியது

**Heavy Duty வகை**
- ஜப்பானிய Compressor
- பொது இடங்கள் அலுவலகம் மற்றும் வீடுகளில் பாவிக்கக் கூடியது.

**LANKA NIPPON**
No.18, Keyzer St. Colombo-11. Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc, Colombo-04. Tel:589992.
AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்




## யாழ்.குடாநாட்டு மின்பாவனையாளர்களுக்கான
# மின்துண்டிப்பு அறிவித்தல்

மின்பட்டியல்களைச் செலுத்தாமல் இருப்பதனால் பல ஆயிரம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு எமது பிரதேசத்தில் நிலுவையாக உள்ளது. இதனைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு 2001-05-14ஆம் திகதி பத்திரிகைகளில் விளம்பரம் செய்தோம். ஆனாலும் இதற்கான பூரண ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. நிலுவைகள் கூடுகிறதே தவிரக் குறையவில்லை.

எனவே 2001-07-18ஆம் திகதியிலிருந்து பட்டியல் நிலுவையுள்ளவர்களது மின்விநியோகத்தைத் துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். மின்துண்டிக்கப்பட்டபின் முழு நிலுவையும் ரூ. 500/- துண்டிப்பு நடவடிக்கைக் கட்டணமும் செலுத்தப்பட்டால் மட்டும் மீளிணைப்பு வழங்கப்படுமென்பதையும் அறியத்தர விரும்புகின்றேன்.

**மின் பொறியியலாளர்,**
*யாழ்.பிரதேசம்,*
*இலங்கை மின்சார சபை,*
*சுன்னாகம்.*

(C/17428)

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

# நேர்முகப் பரீட்சை நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை16

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் பகிஷ்கரிப்பு தொடர்கின்ற போதிலும் புதுமுக மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சை திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-9)

# வர்த்தக...

(7ஆம் பக்கம் தொடர்ச்சி)

உணரப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பத்துறையில் தற்பொழுது புரட்சியை ஏற்படுத்தும் நாடுகள் யாவும் இலத்திரனியல் வர்த்தகத்துக்காகவே பெரும் தொகைப் பணத்தை முதலீடு செய்கின்றன. எனவே எதிர்காலச் சவால்களை எதிர்நோக்கவுள்ள இளைய தலைமுறையினர் இலத்திரனியல் வர்த்தகம் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகிறது.

★


# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை - கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

*வேலணை*
*வைத்திய கலாநிதி*
**சி.இராசரத்தினம்,**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(89616)


# இலங்கை மின்சார சபை
## யாழ்.பிரதேச அலுவலக
# அறிவித்தல்

மீளவும் மின்னிணைப்புப் பெற விண்ணப்பித்து எனது அலுவலகத்தில் இருந்து கட்டணங்களைச் செலுத்துமாறு அறிவிப்புக் கிடைத்தவர்களுடைய கடிதங்கள் இன்றிலிருந்து காலாவதியாகிவிட்டன. இலங்கை மின்சார சபையின் புதிய அறிவுறுத்தல்களுக்கமைய உங்களுடைய இடங்கள் மீண்டும் பார்வையிடப்பட்டு வேறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும். அவற்றில் காட்டப்படும் தொகையினைச் செலுத்தி இணைப்புக்களைப் பெறலாமென அறியத்தருகின்றேன்.

சட்டவிரோத மின்பாவனையால் எமக்குப் பெரும் வருமான இழப்பு ஏற்படுகின்றது. எனவே அவற்றைத் துண்டிப்பதற்கும் அவ்வாறு மின்சாரம் பெறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்கள் சட்டரீதியாக மின்சாரத்தைப் பெற்று எமக்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


**பிரதேச மின் பொறியியலாளர்,**
*இலங்கை மின்சார சபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.*

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

(C/17427)

# ஈராண்டு நினைவலைகள்

மண்ணில் 10 - 10 - 1971



விண்ணில் 16 - 07 - 1999

## அமரர் பி.கருணாரத்ன
(ரஞ்சன்)

நேரிய பார்வையும் நிமிர்ந்த நன்னடையும் - உங்கள்
முகவழகும் மெய்யொளியும் குறுநகையும் காண்பதெப்போ?
வாழும் பருவமதில் வேரோடு சாய்க்க எண்ணி
வஞ்சனையால் உம்மைக் கொன்று போட்டாரோ?
உள்ளிருந்தோர் கூடவொரு உற்ற கதை சொல்லவில்லை
பொள்ளல் விழுந்த பின்னே புறத்தில் தீப்பற்றினதோ?
சுட்டு விழுத்த, நீர் சுருண்டு விழுகையிலே
எட்டுத்திசை அதிர ஏங்கி அழுதீரோ!
தாரமென்றும் சேயென்றும் தவித்திடும் சுற்றமென்றும்
தேம்பியழ விட்டு நீர் சென்ற தெங்கே சொல்லீரோ?!

*கரம்பொன் மேற்கு,*
*ஊர்காவற்றுறை.*

(90079)

*உங்கள் பிரிவால் துயருறும்*
குடும்பத்தினர்.

# அல்வாய்
# மாலிசந்தி பிள்ளையார் கோயில்
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்
## இன்று (16.07.2001)

ஓங்கார நாயகனே!
*வினைகளை வேரறுக்கும் விக்ன விநாயகரே!*
*முன்னை வினை போக்கிடும் மூலப் பரம் பொருளே!*
*உனை நம்பி வந்தோமையா! ஓங்கார நாயகனே!*
*மூஷிக வாகனனே மோதக ஹஸ்தனே!*
*தேரிலேறி வந்தே அருட் காட்சி தந்திடுவாய்!*
*ஐந்து கரத்தோனே! ஆனைமுகத்தோனே!*
*போரோய்ந்து வாழ்வில் நிம்மதி வேண்டுமையா!*
*நீயே கதியெமக்கு ஞான விநாயகனே!*

- கணபதி அடியவன்



*விழா சிறப்புற வாழ்த்துவோர்:*


## ஜெயா நகைமாடம்
22கரட் தங்க நகைகள் நவீன டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து பெற்றிட நாடுங்கள்
**ஜெயா நகைமாடம்**
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

## பிரபா நகைமாடம்
கண்கவர் நவீன டிசைன் 22கரட் தங்க நகைகளை மனம் போல் தெரிவு செய்து அணிந்து மகிழ்ந்திட நாடுங்கள்
**பிரபா நகைமாடம்**
கரவெட்டி கிழக்கு, கோயிற் சந்தை.

## புதிய கணேசா நகையகம்
22கரட் தங்க நகைகளை கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்தினம் பதித்த அழகிய டிசைன்களில் உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்திட நீங்கள் நாடவேண்டிய இடம்:
**புதிய கணேசா நகையகம்**
எம்.எம்.வி.றோட், நெல்லியடி.

(90107)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 12 - 06 - 1934



விண்ணில் 16 - 06 - 2001

## அமரர் மாணிக்கம் சிங்கன்

அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடோடிவந்து எம் துயரில் கலந்துகொண்டும் இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிகள் புரிந்தும் எமக்கு ஆறுதல் அளித்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

இன்று (16.07.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்களது ஆத்மா சாந்திபெற நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கலைமகள் வீதி,*
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

(90108)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சமாதானத்துக்காக

இந்நிகழ்வின் தலைவர் அவர்களே! இந்நிறுவனத்தின் பணிப்பாளர், பணியாளர்களே, வெளிநாட்டு நண்பர்களே, பிறநாடுகளின் தூதரக அதிகாரிகளே, பார்வையாளர்களே இந்நிகழ்வின் நடுநாயகர்களாக நாட்டின் நாலாபுறமும் உள்ள பல்கலைக் கழகங்களிலும் இருந்து வந்துள்ள சகோதர, சகோதரிகளே!

சர்வதேச சமூகம், தமிழ்மக்களின் நம்பிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமானால் அந்த மக்கள் நாளாந்தம் எதிர்கொள்கின்ற நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்க முனையவேண்டும். இவை தீர்க்கப் படாதவிடத்து 50 வருடகாலப் பழைமை வாய்ந்த எமது இனப் பிரச்சினை விடயத்தில் எவ்வாறு

**நாட்டின் சகல பல்கலைக்கழகங்களினதும் மாணவர் பிரதிநிதிகள் பங்குபற்றிய சமாதான ஆய்வுப் பட்டறை ஒன்று அண்மையில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.**

**மூவின மாணவர்களுடன் வெளிநாட்டு மாணவர்களும் பங்குபற்றிய அந்த ஆய்வுப் பட்டறையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி தமிழில் ஆற்றிய உரை இது.**

உங்கள் எல்லோருக்கும் தமிழ்த் தாயின், இலங்கைமாதாவின் வணக்கங்கள்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் உருவாக்குவதற்கு ஏதுவான செயற்றிட்டங்களை வரைவதற்கு உதவிய அன்புள்ளங்களையும், அதற்கு உறுதுணையாக நின்ற எல்லாம் வல்ல பரம்பொருளையும் ஆசித்து நிற்கின்றோம்.

இப்பயிற்சிப் பட்டறை மூலம் சமாதானம் என்ற இலக்கை அடைவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து நின்றோம். இன்று இலங்கையர் என்ற முறையில் இச்சமாதானம் என்ற சொல் எல்லோர் மனங்களிலும் ஆழமாகப் பதிந்துள்ளது. இந்த இலகுவான, எழுதில் உச்சரிக்கக் கூடிய சொல்லை இதுகாலமும் முறுகல் நிலையில் உள்ள இரண்டு இனங்களால் ஏன் கொண்டுவர முடியவில்லை என்பது இன்று எம் மத்தியில் இருக்கின்ற முக்கிய கேள்வியாகும்.

தீர்வு காணமுடியும்?

எம் இரு இனங்களுக்கிடையேயும் எழுந்துள்ள இனப்பிரச்சினைக்கு ஏதுவான காரணிகளைச் சம்பந்தப்பட்ட இரு தரப்புமே மனந்திறந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படுவதில் எவ்வளவோ தடைகளும், தடங்கல்களும், தாமதங்களும், தட்டிக்கழிப்புகளும் காணப்படுகின்றன. கடந்தகால சம்பவங்கள் இத்தடங்கலுக்குக் காரணமாக இருந்துவிடக் கூடாது. வசந்தமான எதிர்காலத்தின் நம்பிக்கையுடன், நிகழ்காலம் கற்றுத் தந்த பாடத்துடன் இச்சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். இச்சமாதான முயற்சியில் ஒரு தரப்பு மாத்திரம் சமாதானத்திற்கான சமிக்ஞைகளைத் தெளிவாகக் காட்டி நிற்க மறு தரப்பு அதை உதட்டளவில் மட்டும் உச்சரித்துக் கொண்டு வேறு விடயத்தல் முனைப்பாகச் செயற்படுவது எவ்விதத்திலும் சமாதானத்தை உருவாக்கிவிடப் போவதில்லை.



இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற ஆய்வுப் பட்டறையில் கலந்துகொண்ட பல்கலைக்கழக மாணவர்கள்

இக் கேள்விக்கு இங்கு நாங்கள் மேற்கொண்ட பயிற்சித் திட்டத்திற்கூடாக ஓரளவேனும் தெளிவு ஏற்பட்டிருக்கும் என நம்புகிறோம்.

இதற்கான அடிப்படைப் பிரச்சினைகளை இங்கு ஆராய விழைவது கடந்தகால கசப்பான அனுபவங்களை மீண்டும் ஒரு தடவை கிளறுவதாக அமைந்துவிடும். அது இன்று ஓரளவிற்கேனும் புரிந்துணர்ந்து கொண்டுள்ள எம் இனங்களிடையில் உள்ள முரண்பாட்டை மேலும் சிக்கலாக்கக் கூடும்.

சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுத்த பெரும்பான்மைச் சமுகத்திடம் இருந்து அஹிம்சை ரீதியாகப் பெற்றுக்கொள்ள முடியாது என்று சிறுபான்மைத் தலைவர்கள் கருதிய பின்னர் இளைஞர்கள் கையில் கருவிகொண்டு அம்முயற்சியைத் தொடர்ந்தனர். இது எமது கடந்தகால வரலாற்றின் ஒரு பகுதி.

நாட்பட்ட நோயொன்றைக் குணப்படுத்த முயலுகின்ற வைத்தியர் ஒருவர் முதலில் அந்நோயினால் தற்போது நோயாளி அனுபவிக்கின்ற துன்பங்களிற்கே பரிகாரம் காண்பார். அதன் பின்னரே நோய் மூலத்திற்கு வைத்தியம் செய்வார். உதாரணமாக சலரோக நோயாளி ஒருவர் தற்போது மயக்க நிலையில் இருப்பாரானால், மயக்க நிலையை நீக்கிய பின்னரே சலரோகக் கட்டுப்பாட்டு சிகிச்சைமட்டில் அக்கறைகொள்ள வேண்டும். அல்லது நோயாளி சலரோகம் அப்படியே இருக்கத் தற்போதுள்ள மயக்கநிலை காரணமாக மரணத்தைத் தழுவலாம்.

இன்று இலங்கைத் தீவை ஆட்டிப்படைக்கும் இனப்பிரச்சினையில் தமிழ் சமூகம் எதிர்நோக்குகின்ற நடைமுறை, நாளாந்த பிரச்சினைகளைத் தீர்த்த பின்னரே நாள்பட்ட இனப்பிரச்சினை தொடர்பாகத் தீர்வுத திட்டத்தைத் தீர்மானிக்க முடியும்.

எமது இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறை கொண்டுள்ள அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள்,

கடந்த பலவருடகால இனப்பிரச்சினையில் இரு இனங்களுக்கிடையேயும், சந்தேகம் என்ற குணம் மேலோங்கி நிற்கின்றது. இச்சந்தேகங்கள கடந்த காலங்களில் ஏற்பட்ட சில சம்பவங்களோடு இன்று தொடர்புபடுத்தி நோக்கப்படுகின்றது. எமது பிணக்கைத் தீர்ப்பதற்கு இக்கடந்த காலச் சம்பவங்கள் ஒரு காரணமாக இன்று நோக்கப்படுமானால் இலங்கைத் தீவில் எக்காலத்திலும் எமது இனப்பிரச்சினை பேச்சுவார்த்தைகளுக்கூடாகத் தீர்க்கப்படலாம் என்பது பொய்யாகிவிடும்.

கடந்த காலத்தில் நம்பிக்கை கொள்ளாமல் எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்வதன் மூலம் இரு சாரருக்குமிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தலாம். தொடர்பு சாதனங்களுக்கூடாக நாங்கள் அறிகின்ற வரையில், எதிர்காலத்தில் நம்பிக்கைகொள்ளச் செய்வதில் ஒரு தரப்பு வெற்றிகண்டுள்ளது போல் எமக்குத் தெரிகின்றது. தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற அமைப்பு, ஒருதலைப்பட்சமாக அறிவித்திருந்த யுத்தநிறுத்தம், போர்க் கைதிகளை விடுவித்தமை, தனி நாடு என்ற தமது கொள்கையில் இருந்து கீழ் இறங்கி ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றைக் காண்போம் என்று நிகழ்காலத்தில் செய்து காட்டிநின்ற செயல்கள் அவர்களின் எதிர்காலத்தில் சமாதானத்தின் மீதான அக்கறையை வெளிக்காட்டி நிற்கின்றன.

இக்காலப்பகுதியில் மறுதரப்பின் எதிர்காலத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான நிகழ்கால நடவடிக்கைகள் சரியாக அமைந்துவிடவில்லை. இதற்குப் பதிலாக ஆட்சியாளர்களும், சில சிங்களப் பேரினவாதிகளும் இவற்றையெல்லாம் திரிபுபடுத்தி மற்றைய அமைப்பின் செயற்பாடுகளைக் களங்கப்படுத்தும் வகையில் தமிழ் மக்களிடமிருந்தும், சர்வதேச சமூகத்திடமிருந்தும் வேறுபடுத்தும் நடவடிக்கைகளிலேயே முனைப்பாக நின்றுள்ளார்கள். இவர்கள் எதிர்காலததில் நம்பிக்கையை ஏற்படுத்தக கூடிய எந்த ஆக்கபூர்வமான நட வடிக்கைகளையும் நிகழ்காலத்தில் மேற்கொண்டதாக நாங்கள் அறியவில்லை. இக்காலப் பகுதியில் அரசாங்கம் போரை விரிவுபடுத்துவதிலேயே முனைப்பாக நின்று கொண்டது. இந்த நடவடிக்கைகள் பிற்பகுதியில் ஒருதலைப் பட்சமாக அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தத்தை முடிவுக்கக் கொண்டு வருமளவிற்கு அமைந்துள்ளது என்பது சமாதானத்தை விரும்பும் எமக்கு கசப்பாகவே உள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் அரசாங்கம் இவ்வினப்பிரச்சினையை பேச்சுவார்த்தைக்கூடாக தீர்க்கும் என்பதில் எள்ளளவும் நம்பிக்கை இழந்துள்ளனர். இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறை கொண்டுள்ள உள்ளூர், சர்வதேச சமாதான விரும்பிகள் தமிழ் மக்கள் அரசாங்கம் மீது நம்பிக்கை கொள்ளுமளவில் சில நடவடிக்கைகளையாவது உடனடியாகச் செய்வதற்கு தூண்டுதலாக இருக்க வேண்டும்.

இதைவிடுத்து தட்டிக் கழிக்கும், காலத்தை இழுத்தடிக்கும் மனப்பாங்குடன் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் முடிவிற்கு வருதல் வேண்டும்.

இரண்டு நண்பர்கள் தமக்கிடை


## ஒரே குடையின் கீழ்

யில் கசப்புணர்வு கொண்டு பிரிந்து நிற்கும்போது, அவ்விருவருமே அக் கசப்புணர்வுகளுக்குரிய காரணங்களை ஆராய்ந்து நட்பாக வேண்டும். அதுவே ஆரோக்கியமானது. இதற்கு பிறிதொருவர் இடைநடுவராக நின்று செயற்படலாம். இவற்றிற்கு மாறாக ஒருவர் எமது பிரச்சினைக்கு இதுதான் தீர்வென்று காட்ட முயல்வது எவ்வகையிலும் பழைய நட்பை மீள உருவாக்க வழி வகுக்காது. இது போலத்தான் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 'தீர்வுப் பொதியை' அரசாங்கம் காட்டுவதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்கிறார்கள். இடைநடுவில் சமரசம் செய்யும் நபரை ஒருதரப்பு தனது இஷ்டத்திற்கு அமைய மாற்ற விளைவதும் மறுதரப்பை நம்பிக்கை இழக்கச் செய்துவிடும்.

ஓர் இனத்தின் தலைமை எது, தலைவர்கள் யார் என்பதை அவ்வினத்தவர்கள் கூறுவதே ஆரோக்கியமானது. இதைவிடுத்து வேறொரு தரப்பு மற்றைய தரப்பின் தலைமைத்துவத்தையும், தலைவர்களையும் காட்டுவதும் ஆரோக்கியமான ஒன்றாக அமைந்துவிடப்போவதில்லை.

இலங்கையில் தமிழர் வரலாற்றில் எத்தனையோ, மகத்தான தலைவர்கள், சிந்தனைச்சிற்பிகள் இருந்தார்கள். தற்போதும் அவ்வாறனவர்கள் இருக்கலாம். இருந்த போதும் பெரும்பான்மையான தமிழர்கள் தமது தலைமை, தலைவர்கள் யார் என்று சொல்கின்றனரோ அந்த இனத்தின் இன்றைய தலைமைத்துவத்துக்குரியவர்கள் அவர்களே. இது எவ்வாறு எனில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் போன்று தமிழ்க் கட்சிகளை ஒரு புறமும், சிங்களக் கட்சிகளை இன்னொரு புறமும் வைத்து ஒரு கிரிக்கெட் தொடரை விளையாடுவோம் என்று வைத்துக் கொண்டால் இப்போட்டிகளின் முடிவில் இரண்டு பக்கங்களில் இருந்தும் இறுதியாட்டத்திற்கு ஒரு தலைமையின் கீழ் இரண்டு அணிகளே பங்குபற்ற முடியும். இதேபோன்றுதான் தமிழர்களின் தரப்பில் விடுதலைப் புலிகள் தமது திறமையான ஆட்டத்தின் மூலம் இறுதியாட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மறுதரப்பில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி உங்கள் தரப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சமாதானம் என்கின்ற இறுதியாட்டத்தில் இவ்விரு அணிகளும் களமிறங்கி மோதிக்கொள்ள, ஏனையோர் பார்வையாளர் அரங்கில் இருந்து ஆட்டத்தை இரசிப்பதில் மட்டும் நின்று



தெற்கு பல்கலைக்கழக மாணவருடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி.

விடக்கூடாது. எத்தனையோ கிரிக்கெட் ஆட்டங்கள் பார்வையாளர்களின் ஆதரவினாலே வெற்றி இலக்கை அடைந்துள்ளன. எனவே பொதுமக்களாகிய நாங்கள் சமாதானம் என்ற இறுதியாட்டம் வெற்றியடைய உற்சாகத்துடன் நின்று ஆதரவு கொடுக்கவேண்டும்.

எனது அன்பிற்குரிய இந்நாட்டின் நாலாபுறமும் உள்ள பல்கலைக்கழகங்களில் இருந்து வந்திருக்கின்ற மாணவர் சமூகமே! நாங்கள் எல்லோரும் இவ்விறுதியாட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள இவ்விரு அணிகளினதும் உற்சாகத்திற்குரிய பங்காளிகள். எமது தாய்த் திருநாட்டை ஆட்டிப் படைக்கும் இக்கொடிய யுத்தத்தினை சமாதான சூழ்நிலைக் கூடாகக் கொண்டு வருவதில் எமது பங்கு மிக முக்கியமானது. பொறுப்பு வாய்ந்தது. நாங்கள் தான் எதிர்காலத்தின் தலைவர்கள். நாங்கள்தான் எதிர்காலத்தில் இன, மத, சாதி வேறுபாடற்ற நவீன இலங்கையைக் கட்டியெழுப்பப் போகிறவர்கள். எமது சக்தி மகத்தானது. மாணவர் சக்தியால் உலகில் பல்வேறு புரட்சிகள் நடந்தே

## அணி திரள்வோம்!

றின. பல நாடுகளில் ஆட்சியதிகாரங்கள் கூட இவ்வாறான மாணவர் போராட்டங்களால் மாற்றப்பட்டன. அவ்வாறான போராட்டங்களில் எத்தனையோ மாணவர்கள் தமது இன்னுயிரைக் கூடத் தியாகம் செய்துள்ளார்கள். இன்று எமது தேவை இனங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவது, புரிந்துணர்வை ஏற்படுத்துவது. கடந்த 3 நாள்களாக நாங்கள் இந்த நிறுவகத்திற்குள் எமக்குள் இருந்த கசப்புணர்வுகள், குரோதங்கள், பேதங்கள் எல்லாவற்றையும் மறந்து நண்பர்களாக ஓர் அறைக்குள் உண்டு, உறங்கி இருந்தோம். இந்த நட்பு இன்றோடு குலைந்துவிடக்கூடாது. எமக்குள் ஏற்பட்ட இந்த நட்புப்போல் ஐக்கிய இலங்கைக்குள் எல்லா இன மக்களும் ஒன்றாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். கடந்த காலங்களில் இவைகளுக்கிடையில் நட்புறவை உருவாக்க அரசியற் தலைவர்கள் தவறிவிட்டார்கள். அந்தத் தவறின் வெளிப்பாடுதான் இன்றைய இந்தக் கொடிய யுத்தம். இத்தவறைத் திருத்தவேண்டிய பொறுப்பு பல்கலைக்கழக மாணவர்களாகிய எமது கைகளிலேயே தங்கியுள்ளது. இதுவரை காலமும் நாங்கள் வெறுமனே கல்வியுடன் மட்டும் நின்றுவிட்டதாக உணர்கின்றோம். நாங்கள் இனி இந்தச் சுயநலனிற்கு வெளியே வேலை செய்ய வேண்டியவர்கள். இந்த நாட்டில் நிலையான சமாதானம் உறுதியாக ஏற்படும் வரை நாமெல்லோரும் சமாதானம் என்ற ஒரே குடையின் கீழ் நின்று உறுதியாக உழைக்கவேண்டியவர்கள். இப்பணியை யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் என்ற முறையில் நாங்கள் தொடங்கியுள்ளோம். இந்த நோக்கோடு செயற்படுகின்ற எமக்குப் பல்வேறு அச்சுறுத்தல்கள், உளவியல் உளைச்சல்களும் பாதுகாப்பு படைகளாலும் ஏனைய ஆயுதக் குழுக்களாலும் ஏற்பட்டுள்ளன. இருந்தபோதும் நாங்கள் எங்கள் நோக்கில் உறுதியாகச் செயற்படுவதனால் எந்த அழுத்தங்களிற்கும், அச்சுறுத்தல்களும் பயப்பட்டு பணிந்து போகவில்லை. இந்த முயற்சியில் நாங்கள் எதிர்காலத்தில் கைது செய்யப்படலாம் அடித்து சித்திரவதை செய்து அடைக்கப்படலாம். எல்லாவற்றிற்கும் மேலாக நாங்கள் காணாமற் கூட போகலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்களும் எங்களுக்காக குரல்கொடுக்க முன்வரவேண்டும். அதை நீங்கள் செய்வீர்கள் என்பதை உங்களோடு நின்ற இந்த நாள்களுக்கூடாகக் கொண்ட தோழமையில் இருந்து உணர்ந்து உவகை கொள்கின்றோம்.

எமது சமாதானம் என்ற உயரிய நோக்கு முன்னெடுத்துச் செல்லப்பட நாம் எல்லோரும் ஒரு பொதுவான நிகழ்ச்சித் திட்டத்திற்கூடாக செயற்பட வேண்டும். எமக்குள் இருந்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைத் தெரிவு செய்து இம் முயற்சிகளை முன்னெடுப்போம். இது இன்று சாத்தியப்படாது விட்டாலும் நாம் எல்லோரும் எம்மிடங்களிற்குச் சென்ற பின்னர் எமக்குள் இருந்து இவ்வுறுதியான அமைப்பை உருவாக்குவோம். நாங்கள் இங்கு கற்றுக் கொண்ட சமாதானம் என்ற ஆய்வுப் பட்டறையின தளத்தில் இருந்து எமது செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படட்டும். இதுபோன்ற நிகழ்ச்சித் திட்டங்களையும் சமாதானத்தின் தேவைகளையும் அவசியத்தையும் நாங்கள் எமக்குள் இருந்து சாதாரண மக்கள் வரை எடுத்துச்செல்வோம். அதன் மூலம் இதற்கு விரோதமான மனங்களை அது எந்த இனத்தவர்களாக இருந்தாலும் மாற்ற முற்படுவோம். இது எம்மால் உறுதியாக முடியும். அந்த நம்பிக்கையுடன் எமது தாய்த் திருநாடு சகஜ நிலைக்கு வரும்வரை எமது பங்களிப்பு உறுதியாக - இறுதி வரை - இருக்கட்டும். இந்தப் பசுமையான புரட்சி அரை நூற்றாண்டு கால எமது இனப்பிரச்சினையை ஒரு முடிவிற்குக் கொண்டுவருமென்றால் எங்களிற்குப் பின்னால் எமது பல்கலைக் கழகங்கள் தரக் கூடிய பட்டங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக எமது பெயர்கள் இந்த நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். ★

பா. ஆதரமேஸ் ஜெயக்குமார்



திவ்வியனை விடுவிக்கக் கோரியும் யாழ்.பல்கலைக்கழத்தைத் திறக்குமாறு வலியுறுத்தியும் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கல்வி சாரா ஊழியர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய அடையாள உண்ணாவிரதத்தின் போது எடுக்கப்பட்ட படம். (க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஸ்கன், இதர பிளாஸ்டிக்காலான கையடக்க அளவு கொண்ட வாட்டர் பம், ஜெனரேற்றர் போன்றவைக்குரி யன ஒட்டியும் திருத்தியும் கொடுகப் படும். தொடர்பு: சு.நாராயணசாமி, 301, கஸதூரியார் வீதி (மேல்மாடி, கன்னாதிட்டிச் சந்திக்கருகில்).(89981)

## கோழிமுட்டை விற்பனைக்கு

எங்களிடம் கோழிமுட்டை மொதத மாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம். மல்லிகா, 149, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் அருகில்) யாழ்ப்பாணம். (90104)

## இன்றுமுதல் விலைமாற்றம்

உங்கள் அபிமானம் பெற்ற *காவேரி மிளகாய்த் தூள்* இன்று (16-07-2001) திங்கட் கிழமை முதல் 1 கிலோவின் விலை 10/= ரூபாவால் அதி கரிக்கப்பட்டுள்ளது என்பதைப் பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம.

கந்தசாமி அன் சன்ஸ்,
இல.16, ஆடியபாதம் வீதி,
யாழ்ப்பாணம். (90124)

## படிவம்

தேசிய கல்விக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான விண்ணப் பப்படிவம் விற்பனைக்கு உண்டு. விண் ணப்ப முடிவு திகதி: 10.08.2001. வர்த்த மானி பார்வைக்கு உண்டு. பாரதி, 430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3081. (C-17375)

## BINDERS தேவை

**Book Binders** தேவை. நேரில் வரவும். பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C-17376)

## தவறிவிட்டது

கோண்டாவில் புகையிரத வீதி யைச் சேர்ந்த மார்க்கண்டு சாந்த குமார் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.763524183V) கோண்டா விலுக்கும் யாழ். பஸ்நிலையத்திற்கு மிடையில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் 'ஐங்கரன் பந்தல்' கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (90106)

## வீரமக்கள் தின இன்றைய நிகழ்வு

புளொட் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வீரமக்கள் தினத் தின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

இதனையொட்டி இன்று மாலை 4.30 மணியளவில் உலகத் தமிழா ராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்ட வர்களின் நினைவுத்தூபி பெயர் வளைவு திறந்து வைக்கப்படவுள் ளது. (க-4)

# ஓவியப் போட்டியில் வென்றோர்

தென்மராட்சி கல்வி வலய அலு வலகத்தின் அனுசரணையுடன் சாவ கச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் வலய பாடசாலை மாண வர்களிடையே நடத்தப்பட்ட சுகாதார வார ஓவியப் போட்டியில் வகுப்பு ரீதியாக வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரிசில்கள் அந் தந்தப் பாடசாலைகளின் அதிபர் கள் ஊடாக வழங்கப்படவுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டது. தரம் 6 - ஈ.பிரதீபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தரம் 7 - ச.தயாளசீலன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), தரம் 8 - சு.பிருந்தாபன் (சாவகச் சேரி இந்துக்கல்லூரி), தரம் 9 - சு.கிரி சாந்த் (சாவகச்சேரி இந்துக்கல் லூரி), தரம் 10 - க.நிஷாந்தகுமார் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), தரம் 11 - தி.சசிகரன் (பளை மத்திய கல்லூரி), தரம் 12 - க.தனந்தசயன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

## ஓவியங்கள் சேகரிப்பு

வலி.வடக்கு,ஜூலை16

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி கலாசார பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சினால் நடத்தப்பட வுள்ள தமிழ் இலக்கிய விழாவில் ஓவியக்கண்காட்சியும் இடம்பெற வுள்ளது.

இந்தக் கண்காட்சியில் வைப்பதற கான ஓவியங்களை சேகரிக்கும் பணியில் யாழ்மாவட்ட கலாசார உத்தி யோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கண்காட்சியில் ஓவியங்களை வைக்க விரும்புபவர்கள் பிரதேச செயலகங்களில் உள்ள கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (க-86)

## காணி கையளிப்பு நிகழ்வு

பருத்தித்துறை பிரதேச செயலகம அமைக்கக் கொள்வனவு செய்யப் பட்ட காணியைக் கையளிக்கும் வைபவம் நாளைமறுதினம் புதன் கிழமை நடைபெறும்.

செயலகம் அமைக்க பொது மக்களின் பண உதவியுடன் பருத் தித்துறை பிரதான வீதியில் பஸ் டிப்போவுக்கு அருகில் கொள்வனவு செய்யப்பட்ட காணி, இவ் வைபவத் தின்போது யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனிடம் சம்பிரதாயபூர்வ மாகக் காணிக் கொள்வனவுக் குழு வினால் கையளிக்கப்படும். (க-173)

## கூட்டம்

தீவுப்பகுதி தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## யாழ் - கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம் தேர்த்திருவிழா

உ

**நாளை (17-07-2001) செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும்.**

நண்பகல் 12.00 மணிக்கு சங்காபிஷேகம்

பிற்பகல் 3.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை

அடியார்கள் அனைவரையும் உற்சவத்தில் கலந்துகொண்டு முனீஸ்வரன் அருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

- தேவஸ்தானம் -

(90129)

# ஒளியிழந்து 31 நாள்களையும் சுடரிழந்து ஓராண்டினையும் நினைந்து அஞ்சலிக்கின்றோம்





**டெய்சி ஜேசுதாசன்** — **கிளைமெண்ற் ஜேசுதாசன்**

27-02-1971 ← பிறப்பு → 07-04-1943

16-06-2001 ← இறப்பு → 25-07-2000

*அன்புள்ள அப்பாவே!*
*அபலைகளாக எமைத் தவிக்கவிட்டு*
*ஆண்டவனடி சென்ற ஓராண்டில் - உம்*
*அன்பு மகளையும் உம்மிடம் அழைத்தீரோ?*
*பாசமிகு சகோதரியே!*
*பூத்துக் குலுங்கிய உன்னுறவை*
*புரியா நோய் பாதியில் பறித்ததுவோ?*
*பாசமிகு மனைவியையும் பஞ்ச மலர்களையும்*
*பாதையறியாக் காட்டின் நடுவே விட்டு*
*பரமனடி சென்றீர்களோ?*
*அழுகின்றோம் மனம்வெதும்பி*
*ஆற்றுவார் எவருமின்றி!*

இவரின் ஆன்ம சாந்திக்காக *இன்று (16-07-2001) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு* உலகரட்சகர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

எனது அன்பு மகளும் மற்றும் சகோதரியுமாகிய டெய்சியின் மரணச்செய்தி அறிந்து நேரில் வந்து எம் ஆழ்ந்த துயரத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, கடிதம், கண்ணீர் பிரசுரம் மூலம் அனுதா பச் செய்தியை அனுப்பியவர்களுக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அருட்தந்தையர்கள், அருட்செல்வி கள், அருட்சகோதரர்கள், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள், சன் லைட் போட்டோப் பிரதி உரிமையாளர், ஊழியர்கள் மற்றும் சகல விதத்திலும் எமக்கு உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

*பிரிவால் துயருறும்:*
அன்புத் தாய், சகோதரிகள்,
உறவினர்கள்.

*உலகரட்சகர் ஆலயம்,*
*உடுப்பிட்டி.*
(C/17442)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலக
ஓய்வூதியக் கணிப்புக் கிளையில் சேவையாற்றும்
எமது சக அலுவலரான

**கந்தையா ஸ்ரீவள்ளிநாயகி** (வள்ளி)

அவர்களின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித் துக் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

**கணக்காளர்களும்,**
**ஓய்வூதியக் கணிப்பு, ஓய்வூதியக் கொடுப்பனவு கிளைகளின் அலுவலர்களும்.**
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.* (90131)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேணுவதி பழனிவேல்

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணத் தில் வசித்துவந்தவருமாகிய திருமதி வேணுவதி பழனிவேல் நேற்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற பழனிவேல் (காரைநகர் கிராம சபை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கலாவதி (முத்துலிங்கத் தின் அன்புத் தாயாரும், K.S.முத்துலிங்கம் (சமூகக்கல்வி ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாரும், மு.கலை யழகன் (யாழ்.இந்துக்கல்லூரி), மு.சிந்துஜா, மு.சிவானுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மு.கலாதரன், மு.சத்தியா, மு.வித்தியா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பரஞ்சோதி (பொலீஸ் அத்தியட்சகர், வவுனியா) அவர்களின் சிறிய தாயாரும், திருமதி சீனிவாசகராசா புவனேஸ்வரி, திருமதி அருந்தவநாதன் திலகவதி, திருமதி செல்வராசா ஆனந்தவதி (கட்டட ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சிவப்பிரகாசம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.01, சிவப்பிரகாசம் வீதி,*
*(**Dr**.கெங்காதரன் டிஸ்பென்ஸரி)*
*ஐயனார்கோயிலடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
**K.S.முத்துலிங்கம்**
(மருமகன்)
(உடுவில் மகளிர் கல்லூரி.)
(90125)

## சதாசிவம் சிவசம்பு (பாண்டியன்)

*(முன்னாள் தபாலதிபர்)*

அல்லாரையைப் பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட சதாசிவம் சிவசம்பு 13.07.2001 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், தயானந்தன் (ஆனந்தி - ஜேர்மனி), தமயந்தி (கொழும்பு), தயாபரன் (தயா - ஜேர்மனி), தயாளன் ஆகியோரின் அன்புத் தகப்பனா ரும், சுதர்சினி (ஜேர்மனி), சரவணபவன் (அபி இம்பெக்ஸ் - கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமனாரும், விசாலாட்சியின் அன்புச் சகோதரனும், திருமதி புனிதவதி கந்தசாமி, காலஞ்சென்ற இராசபூபதி, காலஞ்சென்ற திலகவதி கந்தையா மற்றும் புஸ்பவதி ஆனந்தராசா, காலஞ்சென்ற கைலாசபதி மற்றும் ஸ்ரீபதி (**R.D.O** சண்டிலிப்பாய்), கருணாபதி (மம்மி டடி, சாவகச்சேரி - கனடா) ஆகியோரின் மைத்துனரும், தனேஸ் (ஜேர் மனி), யமீரா (ஜேர்மனி), சூர்யா (ஜேர்மனி), மதுமிதா (கொழும்பு) ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தற்காலிக முகவரி:
*மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதி,*
*(பேர்ன்றிச் தொடர்பகம் முன்பாக)*
*மானிப்பாய்.*

தகவல்:
**சி.கமலாவதி**
(மனைவி)
அல்லாரை, மீசாலை.
(90126)

பண்டிதர்

## சின்னத்தம்பி குணரத்தினம் B.A.Lond.

*(ஓய்வுபெற்ற அதிபர், பகுதிநேர விரிவுரையாளர் - தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக்கொண்ட பண்டிதர் சின்னத்தம்பி குணரத்தினம் அவர்கள் நேற்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை அதி காலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பரிமளம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற தம்பையா மற்றும் அன்னபூரணத்தின் அன்பு மருமகனும், பொன்மலரின் பாசமிகு கணவரும், சிவகௌரி (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - தமிழ்ப்பிரிவு முதலாம் வருடம்), கார்த்திகாயினி (தேசிய கல்வியியற் கல்லூரி - விஞ்ஞானம் இரண்டாம் வருடம்), நிரஞ்சலா (தரம் 10 மாணவி - யாழ்.இந்து மக ளிர் கல்லூரி) ஆகியோரின் ஆருயிர் தந்தையும், காலஞ்சென்றவர் களான திருமதி பொ.தெய்வேந்திரம், செல்வி செல்லத்திரவியம் மற்றும் திருமதி டில்லியம்மா, சிவலிங்கம் (பிரதேச செயலகம் - சங்கானை) ஆகியோரின் பிரியமான சகோதரனும், கந்தசாமி, நடராஜா (ஓய்வு பெற்ற தபாலதிபர்), திருமதி ஆ.இராசமலர், திருநாவுக்கரசு, திருமதி சி.புஷ்பமலர் (பிரதேச சபை - நல்லூர்), கலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கௌரி வாசா"
*கீரிமலை வீதி,*
*பண்டத்தரிப்பு.*
(90127)

*தகவல்:*
**பொன்மலர்** (மனைவி)
**பிள்ளைகள்.**

வறிய குடும்பத்தவர்களுக்கு

## பிறப்புச் சான்றிதழ் வழங்க "யுனிசெவ்" நிதி உதவி

வடமராட்சி கிழக்கு, ஜூலை 16

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையினை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. ப. வேலாயுதபிள்ளை 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொண்டுள்ளார்.

இதன் மூலம் காலங் கடந்த பிறப்புக்களைப் பதிவு செய்வதற்கும் பிறப்பினைப் பதிந்தவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இதற்கான நிதியினை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கவுள்ளது. (ஐ-182)

## மெய்வன்மை போட்டி

தென்மராட்சி, ஜூலை 16

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தினால் நடத்தப்படும் அல்வாய் மனோகரா மழலைகள் கல்விப்பூங்கா சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை வே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினராக கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத் தலைவர் சு. கெங்காதரனும் கலந்து கொள்வர். (க-117)

## புதிய சம்பளத்திட்டம்

மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்குப் புதிய சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து நிலுவையுடன் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

## நாய்களை அழிக்கும் பணி!

சண்டிலிப்பாய், ஜூலை 16

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும் Strychinine எனப்படும் நச்சு மருந்து வந்து சேர்ந்துள்ளது.

இதனை அடுத்து இப்பிரிவு பிரதேச சபைகளின் அனுசரணையுடன் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. (க-135)

2 முஸ்லிம் மாணவர் சூட்டுக்குப் பலியான சம்பவம்

# கல்முனை மக்களின் போராட்டத்திற்கு நியாயம் கிடைத்தேயாக வேண்டும்

### கூட்டணியின் சார்பாக மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஜூலை 16

கல்முனையில் இரு முஸ்லிம் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பொது மக்கள் மற்றும் மாணவர்கள் நடத்தி வரும் போராட்டத்திற்கு நியாயம் கிடைக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்முனையில் ஸ்ரீலங்காப் பொலீஸைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதோரால் சுடப்பட்டார் என்றவுடன் கல்முனைப் பொலீஸார் கல்முனை நகருக்கு வந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததனால் சாய்ந்தமருதைச் சேர்ந்த உயர்தர வகுப்புக் கணித மாணவர்கள் அபூபக்கர் றியால் முகமட், முகமட் றெனியா நஸீர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

முதலில் அந்த இரு மாணவர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர்களின் பெற்றோர், உறவினர் மற்றும் மாணவ சமூகத்திற்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவர்களின் ஆறாத்துயரில் பங்கு கொள்கின்றோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் வேளையில் மாணவ சமுதாயம் உயர்தர வகுப்புத் தேர்வுக்கு ஆயத்தம் செய்கின்ற வேளையில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஏனைய கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக மாணவன் திவ்யனின் கைது தொடர்பாக வேலை நிறுத்தப் போராட்டத்தினால் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

இதே வேளை — கடந்த வெள்ளிக்கிழமை பொலீஸாரின் கண்மூடித்தனமான, எதேச்சாதிகாரமான துப்பாக்கி வேட்டுக்களால் இரண்டு முஸ்லிம் மாணவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசின் பொலீஸாரது கண்மூடித்தனமான இக்கொடிய நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கல்முனைப் பிரதேசத்தில் இக்கல்லூரி மாணவர்களின் கொலைகளைக் கண்டித்து ஹர்த்தால்- பொது வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. பொது மக்கள் முஸ்லிம்- தமிழ் மக்கள், மாணவர்களிடையே பெரும் பதற்றமும் அச்சமும் ஏற்பட்டுள்ளது, இதனால் வன்முறை பரவி பெரும் அழிவுகள் ஏற்பட்டுவிடும்என அஞ்சுகிறோம்.

இருப்பினும் கல்முனை பிரதேச மக்களின் அமைதியான இப் போராட்டத்தை ஆதரிக்கவேண்டியது எமது கடமை. நீதிக்காக நாம்குரல் கொடுக்க வேண்டும்.

காவல்துறையினதும், படைகளினதும் அப்பட்டமான கொலைகள், பாலியல் வல்லுறவுகள், மாணவர்களுக்கு எதிரான கைது நடவடிக்கைகள் அதிகரித்து விட்டன. சர்வதேசச் சமூகம் இந்த அரசுக்கு அழுத்தம் கொடுத்து இத்தகைய படுகொலைகள், பொலீஸாரின் அத்துமீறல், கள் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

அத்துடன் கொல்லப்பட்ட இந்தமுஸ்லிம் மாணவர்களுக்கும் கூட புலி முத்திரை குத்தப்படுகிறது. இத்தகைய உண்மைக்கு மாறானபொய்ப் பிரசாரங்களை கைவிட்டு இரு மாணவர்களையும் கொலை செய்த பொலீஸார் கைது செய்யப்பட வேண்டும். நீதி விசாரணை நடத்தி பொலிஸ் கொலைகாரர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

கொல்லப்பட்ட மாணவர்களின் சார்பில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு நியாயம் கிடைக்க வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெய்வீகத்தால் சமாதானம் மலரும்; மக்கள் துன்பம் விரைவில் நீங்கும்

### அருட்கவி விநாசித்தம்பி நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

தெய்வீகத்தின் மூலம் நாட்டில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இதனை எமது மக்கள் அனுபவிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார் யாழ். இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி.

பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தொடரும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்பது இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் பெரும் விருப்பமாகும். இந்துசமயப் பேரவையும் இந்தநாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது.

இந்துக்கள் மிகுந்த சமய நம்பிக்கை உடையவர்கள். அந்த நம்பிக்கை மூலமாக இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பது இந்துசமயப் பேரவையின் கொள்கையாகும் — என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இந்து சமயப்பேரவை பல பணிகளை நிறைவேற்ற வேண்டிய நிலையிலுள்ளது. இதற்கு இறைவனுடைய திருவருள் நிறைந்த அருட்கவி ஐயாவின் தலைமை எமக்குக் கிடைத்தது வரப்பிரசாதமாகும்.

நம்முன் உள்ள பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்வதற்கு பணபலமும் ஆள்பலமும் மிக அவசியமாகும். நாம் திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் இதனைப்பெற்றுக் கொள்ள முடியும்.

நாவலர் பிறந்த மண்ணில் சைவமும் தமிழும் தாழ்ந்துவிட நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது— என்றார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் க. சி. சிற்றம்பலம் தனது உரையில்:-

இந்துக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அமைக்கப்பட்ட இந்துசமயப் பேரவைப் பணிகளுக்கு நாமனைவரும் வேறுபாடுகளை மறந்து உதவ வேண்டும். இப்பேரவையின் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டியபொறுப்பு அனைவருக்கும் உண்டு — என்றார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் பேசுகையில்:-

எமது பிரதேசத்தில் பலர் வறுமைகாரணமாக மதம் மாறுகின்றனர். இதனைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்றிட்டமொன்றைஇந்து சமயப்பேரவை முன் வைக்க வேண்டும். இதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் தாராளமாக உதவ வேண்டும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன் பேசுகையில்;-

இந்துசமயப் பேரவை மேற்கொள்ளும் பணிகளைப் பாராட்டுவதோடு நின்றுவிடாது எம்மாலான உதவிகளையும் வளங்களையும் இந்துசமயப் பேரவைக்கு வழங்கவேண்டும். கைதடி சைவச்சிறுவர் இல்லம் இடம் பெயர்ந்த நிலையிலும் ஏழாலையில் நல்ல முறையில் இயங்கிவருவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்த இல்லத்தில் வாழும்யாதுமற்ற குழந்தைகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும்வாழும் அன்பர்கள் தாராளமாக உதவவேண்டியது அவசியமாகும் — என்றார்.

தொழிற்சங்கவாதியும் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியுமான க. இ. குமாரசாமி பேசுகையில்:-

எனது பன்னெடுங்கால அனுபவத்தில் இந்துசமயப் பேரவை போன்ற அமைப்பை ஸ்தாபிக்க வேண்டும் என விரும்பியவர்களில் யானும் ஒருவன். இன்று இவ்வமைப்பு மேற்கொண்டுவரும் பணிகளை அனைவரும் பாராட்டுவது எமக்குப் பெருமை தருகின்றது — என்றார்.

யாழ். இந்துசமயப் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவன் தனது உரையில்:-

யாருக்கும் அடிபணியாது இந்துக்களின் நலனைப் பேணத் துணிந்துநின்று செயலாற்ற இந்துசமயப் பேரவை என்றும் தயாராகவுள்ளது. எமது பேரவை தெய்வீகபலத்துடன் செயற்படும் ஆந்மீக இயக்கமாகும்.

நாம் எமது மொழி, மத, கலாசாரங்களைக் காப்பாற்றுவதற்கும், அதனைப்பேணுவதற்கும் பூரணசுதந்திரமுடையவர்கள். எமது மதத்துக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளைக் களைந்தெறிவதற்கு நாம் மாபெரும் தியாகங்களைச் செய்யத் தயாராக வேண்டும். — என்றார். (ஐ-7)

## தாயைக் கடித்தது விசர் நாய்! ஆனால் தடுப்பூசி குழந்தைக்கு

புத்தளம், ஜூலை 15

விசர் நாய்க்கடிக்கு உள்ளான பெண்ணுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்குப் பதிலாக அவரது கைக்குழந்தைக்கு தடுப்பூசி ஏற்றப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த புதன் கிழமை புத்தளம் வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் விசர்நாய்க்கடிக்கு இலக்கான பெண் ஒருவர் தனது கைக் குழந்தையுடன் புத்தளம் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். அங்கு டாக்டரின் மருத்துவசோதனைக்குப் பின் தடுப்பூசி ஏற்றுவதற்காக தாதியின் ஊசி ஏற்றும் அறைக்குச் சென்றார் அந்தத்தாய். கையில் குழந்தை. தாதி ஊசியுடன் வந்தார். தாய் "பயத்தால்" மறுபக்கம் நோக்கியபடி கண்ணை இறுக்க மூடிக்கொண்டார். அவ்வேளை குழந்தை திடீரென வீரிட்டு அழுதது. தாய் கண்விழித்துப் பார்த்தார்; அப்போது குழந்தைக்கு ஊசி ஏற்றப்பட்டது அவருக்குத் தெரியவந்தது.

கொதித்துப்போன அந்தத் தாயார் தாதியைத் தாக்க ஆவேசமாகப் பாய்ந்தார். எனினும் அருகில் இருந்தவர்கள் தாதியைப் பாதுகாத்தனர்.

தடுப்பூசி முழுமையாகச் செலுத்தப்பட்டதால் குழந்தை மயக்கமுற்றது. அவசர சிகிச்சையின் பின்னர் — சுமார் 3 மணித்தியாலங்களின் பின்னர் குழந்தை மயக்கம் தெளிந்து சுயநினைவுக்கு வந்தது.

## சமய சந்நிதிகளில்

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் நிகழும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-173)

★ ★ ★

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஒன்பது நவநாள் மாலை வழிபாடுகளைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனை இம்மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், தொடர்ந்து மறுநாள் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை திருவிழா திருப்பலியும் இடம்பெறும். திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் புனிதரின் ஆசீரும் இடம்பெறும்.

★ ★ ★

துன்னாலை மிந்திரன் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

உற்சவ தினங்களில் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-17)



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) வீரமக்கள் தின முதலாம் நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.முற்றவெளியில் உள்ள தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தலுடன் ஆரம்பமாகின.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா தந்தை செல்வாவின் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும், புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்கள் தந்தை செல்வாவின் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்துவதையும் படத்தில் காணலாம். (க-7)

## திவ்வியன் கைது விவகாரம்:

# தமது பக்கக் கருத்துக்களை தெரிவிக்கிறார் யாழ். தளபதி

யாழ்ப்பாணம்,ஜூலை16

பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது தொடர்பாக வெளியானதாகக் கூறப்படும் சில பத்திரிகைச் செய்திகளை மறுத்து யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரி விசேட அறிக்கை ஒன்றை நேற்று அனுப்பிவைத்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாத நடவடிக்கையில் தொடர்புள்ள பல்கலைக்கழக மாணவன் அண்மையில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டபோது நான் தெரிவித்த செய்தியை திரிபுபடுத்தி தவறான முறையில் மக்கள் மத்தியில் வெளியிட்டு மாணவ சமுதாயத்தை தவறான பாதையில் அழைத்துச் செல்லும் வகையில் பத்திரிகையில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளமை தெரியவருகின்றது. இது தொடர்பாக நான் பல தடவைகள் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், யாழ்.குடாநாட்டின் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை தனிப்பட்ட முறையில் சந்தித்து விளக்கமளித்துள்ளேன். மேலும் பத்திரிகைகளில் தவறான செய்திகளை இனி மேலும் பிரசுரிக்க வேண்டாம் எனக் கோருவதோடு உண்மையான தகவல்களையும் தருகிறோம்.

1) சம்பந்தப்பட்ட மாணவன் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்படும்போது அவரிடம் ரி81 ரகத் துப்பாக்கி இருந்தது.

2) அவர் தான் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு உள்ளவர் என்று பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் தமது தாயார், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதுடன், மாணவன் வழங்கிய தகவலுக்கமைய மேலும் ஆயுதங்களும இராணுவ உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

3) மேற்குறிப்பிட்ட மாணவன் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சகல பயங்கரவாதச் செயல்களுடன் வைத்திருந்த தொடர்புகள் பற்றியும் தெரிவித்துள்ளார்.

4) அவரை எந்தவிதத்திலும் உடல்ரீதியாகச் சித்திரவதைகள் செய்யவில்லை. எவ்வித காயங்களும் அவரது உடம்பில் இல்லை. அவரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், அவரது தாயாரும், மாணவர் ஒன்றியத்தினரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரும் பார்வையிட்டுள்ளார்கள்.

5) மாணவன் செய்துள்ள குற்றச் செயல்களையும், சாட்சிகளின் வாக்குமூலங்களையும் பதிவுசெய்த பின்பு சட்டத்திற்கமைய மாணவனை நீதிமன்றத்தில் ஆஜர்செய்வதற்கு யாழ்ப்பாணப் பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர் உறுதியளித்துள்ளார்.

நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைய, குற்றச் செயல்களைப் புரிந்த நபர் ஒருவரை விடுதலை செய்யும் அதிகாரம் எமக்கு கிடையாது. ஆனால் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் பின்பு சாட்சியின் வாக்குமூலத்தின்படி விடுதலை செய்யப்படமுடியும்.

குடாநாட்டில் மக்கள் வாழ்க்கை பாதிக்கப்பட்டாலும், மாணவர்களின் கல்வி சீர்குலைக்கப்பட்டாலும், அதற்கு அரசாங்கமே பொறுப்பு என சில நபர்களும், இயக்கப் பிரதிநிதிகளும் பிரசாரம் செய்துவருகின்றனர். இது போன்ற செய்திகளை தவறான முறையிலும் - உண்மைக்கு மாறாக - வெளிவருவதைக் கேட்டு யாழ். மக்கள் ஏமாற வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். குடாநாட்டில் அமைதியைப் பாதுகாப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை நான் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டங்களின் பின்பு பல்கலைக்கழகப் பாதுகாப்புக் காரணமாக, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய பல்கலைக்கழகத்தை தற்காலிகமாக மூடிவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கும் பாதுகாப்புப் படையினருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகம் தொடர்பாகவும், காரியாலயங்கள் தொடர்பாகவும் சரி, பாதுகாப்பை முன்னிட்டுத திடீர் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை சீர்குலைக்கப்படுவதற்கும், மாணவர்களின் கல்வி சீர்குலைக்கப்படுவதற்கும் புலிகள் இயக்கமே பொறுப்பு; புலிகள் இயக்கத்தின் பலவந்தப்படுத்தல் காரணமாக பல்கலைக்கழகத்தின் சீர்குலைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்களுமே பொறுப்பு எனக் குறிப்பிட விரும்புகின்றேன்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### சத்துணவுக்கு மாணவர் தெரிவுக் கூட்டம் இன்று

கோண்டாவில்,ஜூலை16

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து சத்துணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் உதவிப் பிரதேச செயலாளர் சி.வேலமுருகோன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இக்கூட்ட அமர்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பெற்றோர்களின் பிரதிநிதிகள், புனர்வாழ்வு அமைச்சின் பிரதிநிதி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (க-86)

# பெண்கள், சிறுவர்களைக் கடத்தும் கேந்திர நிலையமாக இலங்கை!

## அமெரிக்கத் தூதரக அறிக்கையில்

கொழும்பு,ஜூலை16

பெண்கள் மற்றும் சிறுவர்களைக் கடத்தும் கேந்திர நிலையமாக இலங்கை விளங்குகிறது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்லும் அதேவேளை அவர்களில் சிலர் பலவந்தமாக அனுப்பப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களுக்கும் அடிமை வேலைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

அதுமட்டுமன்றி சீனா, தாய்லாந்து, ரஷ்யா போன்ற நாடுகளைச் சேர்ந்த பெண்கள் பாலியல் நடவடிக்கைகளுக்காக இலங்கைக்குக் கடத்தப்படுகின்றனர்.

அத்துடன் வீட்டு வேலை, பாலியல், துஷ்பிரயோகம் மற்றும் ஒட்டகம் மேய்த்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக இலங்கைச் சிறுவர்கள் அரபு நாடுகளுக்கு பலவந்தமாக அனுப்பப்பட்டு வருகின்றனர்.

ஆள் கடத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதுடன் பாலியல் வல்லுறவுகளுக்கு அதிக தண்டனைகள் வழங்கப்பட்டும் இலங்கையில் இந்நிலை தொடர்வது வேதனையளிக்கிறது - என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-4)

# வாசகர் திருமுகம்

## இப்படியும் 'விளம்பரம்' தேவையா?

தமிழ் மக்களுக்கு மறுவாழ்வும் புனர்வாழ்வும் ஏற்படுத்துவதற்காக உதித்தவர்களாகக் கூறிவரும் அமைச்சரின் பணிகளை, யாழ்சேவை வானொலியில் யாழ்.குடாநாட்டுச் செய்திகள் என்ற 'விளம்பர நிகழ்ச்சி'யில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. இந்த விளம்பரங்களைக் கேட்பதற்கு இனிமையாக இருப்பினும் இந்த விளம்பர பிரசாரத்தில் எத்துணை உண்மை உள்ளது என்பது குறித்து தமிழ் மக்களுக்குச் சந்தேகமாகவே உள்ளது.

ஏனெனில் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் கைது தொடர்பாகவும், யாழ்.பல்கலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் பற்றியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜன் கலந்துரையாடியதாக யாழ்.குடாநாட்டு செய்தி "விளம்பரத்தில்" இரண்டு நாள்களாக விளம்பரப்படுத்தினார்கள். ஆனால் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறவே இல்லை என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் அறியக்கூடியதாக இருந்தது.

வியாபாரிகள்தான் தமது பொருள்களைப் பிரபல்யமாக்குவதற்கு சற்று மிகைப்படுத்தி விளம்பரம் செய்வார்கள். ஆனால் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று கூறிக்கொண்டு இவ்வாறு மிகைப்படுத்தி, நடக்காத ஒரு சம்பவத்தை விளம்பரப்படுத்துவது வேடிக்கையாக உள்ளது. இவ்வாறான பிரசாரத்தில் தமிழ் மக்கள் அக்கறையாக இருப்பார்களா? உணர்ந்துதான் செயற்படுவார்களா?

*யாழ்ப்பாணம்.* **வான்மீகி.**

## 'நொண்டிக் குழந்தை'யான நெடுந்தீவை தத்தெடுத்து வளர்க்க எவருமில்லையா?

வடபால் அமைந்த சப்த தீவுகளுள் நொண்டிக் குழந்தையென வர்ணிக்கப்படுவது நெடுந்தீவு.

மழை, காற்று, நீரோட்டம் ஆகியவற்றின் தாக்கங்களுக்கு இடைப்பட்டு, அபிவிருத்தி வேலைகளில் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் உள்ளமையால், இத்தீவானது ஏழு தீவகக் குழந்தைகளுள் நொண்டிக் குழந்தையெனக் கருதப்படுகின்றது. இந்த நொண்டிக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பதினேழு உதவி அரச அதிபர் பிரிவுகளுள் இதுவும் ஒன்றாகும். நெடுந்தீவின் குடிசனத் தொகையைக் கருத்திற் கொள்ளாத இதன் பூகோள அமைப்பையும், பெரிய பரப்பளவையும் கருத்திற் கொண்டே, இது ஒரு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டுக்குப் பின் இங்குள்ளோரில் பலர் இடம்பெயர்ந்து இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும இந்தியா, சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், நோர்வே, ஐக்கிய இராச்சியம், கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களில் சிறு சிறு தொகையினராக ஏறக்குறைய 50ஆயிரம் பேர் வரை குடியேறியுள்ளனர்.

மேலும் 1985ஆம் ஆண்டு 'மே' மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவு - குறிகாட்டுவான் பயணிகள் கடற்சேவையில் ஈடுபட்டிருந்த 'குமுதினி' மோட்டார் படகில் இடம்பெற்ற கோரக் கொலைகளின் தாக்கத்தின் பின் அநேகர் நெடுந்தீவுக்கு வருகைதரவில்லை.

தரமான மூளை வளமிக்க இம்மக்கள் வசதி வாய்ப்பு இன்மையினால் வெகுகாலமாகப் பின்தள்ளப்பட்ட நிலையில் உள்ளனர்.

சகல துறைகளிலும் இத்தீவகம் முன்னேற்றமடைய வேண்டும். அரசின் யாழ்ப்பாணத் திட்டமிடற்பகுதி, இத்தீவின் அமைப்பைக் கருத்திற் கொண்டு முன்னேற்றகரமான திட்டங்களைத் தீட்டி, தகுந்த கண்காணிப்புடன் நடைமுறைப்படுத்தல் மிகவும் வேண்டற்பாலது.

பருவமழைப் பாதுகாப்புத் திட்டம், கடல்வழிச்சேவை, நியமக் கல்வி, வைத்தியசேவை, தொழிற்கல்வி, வேலைவாய்ப்பு, வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றுக்கு முதன்மை அளித்துச் செயற்படுதல் சாலச் சிறந்தனவாகும்.

*நெடுந்தீவு.* **சு.வி.சுப்பிரமணியம்**

# மருத்துவ அலுவலர் சங்க அறிக்கைக்கு யாழ்.பாதுகாப்புப்படைத் தளபதி பதில்

யாழ்ப்பாணம்,ஜூலை16

"கைது செய்யப்பட்டுள்ள திவ்வியன் சித்திரவதைக்கு உள்ளாகி இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் விடுத்துள்ள அறிக்கை தவறானதாகும் என யாழ். பாதுகாப்புத் தளபதி சுசில் சந்திரபால தெரிவிக்கின்றார்" என்ற தலைப்பில் பலாலி இராணுவத் தலைமையகம் நேற்று செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் கடந்த 12 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் மேற்குறிப்பிட்ட விதத்தில் வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லையென நான் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன். பொலீஸாரின் பாதுகாப்பில் இருக்கும் திவ்வியனைப் பார்வையிடுவதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள், பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நான்கு பேருக்கு கடந்த 8 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டது. அன்றைய தினமே திவ்வியனின் தாயாரும் அவருடைய மூத்த சகோதரர் ஒருவரும் அவரைப் பார்வையிட வசதி செய்து கொடுக்கப்பட்டது. கடந்த 9ஆம் திகதி பாதுகாப்பு அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் திவ்வியனை நேரில் சென்று பார்வையிட்டு அவரது சுக நலத்தை விசாரித்தனர். ஆகவே திவ்வியன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படவில்லை என்பதை இவர்கள் மூலமும் அறிந்துகொள்ள முடியும்.

இந்தப் பயங்கரவாதச் சந்தேக நபரை பொறுப்புள்ள அதிகாரிகளும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பிரதிநிதிகளும் சந்தித்தபோது தாம் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்தால் அவா அது தொடர்பாக அவர்களுக்குத் தெரிவித்திருப்பார்; அந்த அதிகாரிகள் சர்வதேச மனிதஉரிமை மீறல்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

கடந்த 20 வருட காலமாக யாழ். மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சீர்குலைப்பதில் ஈடுபட்டிருந்த புலிகள் இயக்கப் பயங்கரவாதிகளும் அவர்களுக்கு உடந்தையாகச் செயற்படும் சில நபர்களும் தவறான முறையில் பிரசாரம் செய்து வருகிறார்கள். புத்திஜீவிகளான நீங்கள் இந்தச் செய்திகள் தொடர்பாகச் சிந்தித்துப் பாருங்கள். கைதுசெய்யப்பட்டுள்ள திவ்வியன் இன்னும் சில தினங்களில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கையை உதயன், வலம்புரி பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆகவே யாழ்.மக்கள் 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் அனுபவித்த வாழ்க்கையை மீண்டும் உருவாக்கிக் கொள்ள வழிசெய்யும் - பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடும் - நபர்களின் தவறான பிரசாரத்தைக் கேட்டு ஏமாற்றமடையாதீர்கள் என அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

***ஆசிரியர் குறிப்பு:***

☆ கடந்த 12 ஆம் திகதி உதயனில் வெளியான அரச மருத்துவ அலுவலர் சங்கத்தின் யாழ்.கிளை வெளியிட்ட அறிக்கையில் திவ்வியன் சித்திரவதைக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

"திவ்வியன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் எவ்வித மருத்துவ ஆதாரமும் இன்றி இச்செய்தியை மறுப்பது எமது பல்கலைக்கழக சமூகத்தைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பான செயலாகும்" - என்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் காரணத்துக்காக திவ்வியனை உடனடியாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அவரின் உடல்நிலை பற்றிய அறிக்கையை வெளியிட வேண்டும் என்றும் அச்சங்கம் அந்த அறிக்கை மூலம் கேட்டிருந்தது. (ஆ-ர்)

### இரு மாதங்களில் 40 ஆயிரம் போத்தல்கள் அடைப்பு!

சண்டிலிப்பாய்,ஜூலை16

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் போத்தலில் பனம் கள் அடைக்கும் தொழிற்சாலையில் கடந்த இரண்டு மாதங்களில் 40 ஆயிரம் போத்தல்களில் கள் அடைக்கப்பட்டுள்ளது.

'சீசன்' காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பனம் கள் போத்தலில் அடைக்கப்பட்டு பின்னர் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் சங்கத் தவறணைகள் மூலம் சந்தைப்படுத்தப்படவுள்ளது.

இவ்வருடம் இத்தொழிற்சாலையில் 50 ஆயிரம் போத்தல் கள் அடைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் கி.குணரத்தினம் தெரிவித்தார். (க-135)

## இரு முஸ்லிம் மாணவர்கள் பலியான

# கல்முனை சூட்டுச் சம்பவத்துக்கு மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

கல்முனை நகரில் முஸ்லிம் மாணவர்கள் இருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை குறிதது யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம் வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அம்பாறை கல்முனை பஸ் நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்கா ஆயுதப் படையினரால் தமிழ் பேசும் முஸ்லிம் மாணவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இச்செயல் தமிழ் பேசும் மக்களின் பால் இனவாத அரச படையினரின் கோரமான மனோநிலையையே வெளிக்காட்டுகின்றது. மேற்படி அப்பாவி முஸ்லிம் மாணவாகள் மீதானபடு கொலையை மிக வன்மையாகக் கணடிக்கின்றோம். சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கென இருக்கின்ற பொலீஸார் தொடர்ச்சியாகப் பொதுமக்களின் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவருவது கவலைக்குரியதாகும். தமது கல்வி நோக்கத்துக்காக தனியார் கல்வி நிலையம் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சாய்ந்தமருதைச் சேர்ந்த ஹனிபா நஷீர் (வயது 19), அபூபக்வுர் பியாஸ் (வயது19) ஆகிய அப்பாவி முஸ்லிம் மாணவர்களே மிலேச்சத்தனமாக ஆயுதப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டும் இதேநாள், இதே நேரம் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி உயர்தர மாணவன் சோ.சஞ்சீவன் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டபின், பெற்றோரை துப்பாக்கி முனையில் சஞ்சீவன் ஒரு புலி உறுப்பினர் என ஒப்புக்கொண்டு கையொப்பமிடுமாறும் வற்புறுத்தினர். ஆனால் பெற்றோர்கள் வன்மையாக மறுத்ததாலும் பல தரப்பினரின் அழுததம் காரணமாகவும் மாணவன் என்ற நிலையிலேயே அவனது உடல் கையளிக்கப்பட்டது. இவ்வாறான கோரமான சம்பவங்கள் தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் நாளாந்த சம்பவங்களாகிவிட்டன.

நேற்றைய தினம் இளவாலைப் பகுதியில் நான்கு பிள்ளைகளின் தாயார் ஆயுத முனையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கேவலப்படுத்தப்பட்டுள்ளார். ஆனால் படைத்தரப்போ இராணுவம் மேற்கொண்டுவரும் பாலியல் வல்லுறவுகளை நியாயப்படுத்தி வருகிறது. அதாவது இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஒருசில 'மனநோயாளிகள்' (Lunatic) எனக் கூறி வருகின்றது. இவர்கள் கூறுவது உண்மையாயின் இலங்கையூராகவும் ஆயுதப் படையினர் இத்தகைய வல்லுறவுகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதனை அவதானிக்கும்போது இலங்கை இராணுவத்தில் உள்ள அனைவருமே மனநோயாளிகள் எனறே எண்ணத் தோன்றுகின்றது. -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# மட்டுவில் அம்மன் கோயிலில் நித்திய பூசைகள் ஆரம்பம்

வலிகாமம்தெற்கு, ஜூலை16

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோயிலில் நீண்டகால இடைவெளிக்குப் பின் மீண்டும் நித்தியபூசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மே மாதத்தில் இடம் பெற்ற தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வுடன் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தின் பூசைகளும் தடைப்பட்டுப் போயிருந்தன.

இப்போது மக்கள் மட்டுவில் பகுதிக்குச் சென்றுவர இராணுவம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து தென்மராட்சிப் பகுதியில் உள்ள சில ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டு நித்தியபூசைகள் இடம்பெற்று வருகின்றன.

பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பிராயச்சித்த அபிஷேகத்தைத் தொடர்ந்து தினமும் வலிகாமத்தில் இருந்து ஆலயக் குருக்கள் அங்கு சென்று நித்திய பூசைகளை மேற்கொண்டு வருகிறார்.

(ஐ-152)

## கண்காணிப்பு குழுக் கூட்டம்

வலிகாமம்தெற்கு, ஜூலை16

சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரதேச மட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச மகாநாட்டு மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற உள்ளது.

(ஐ-152)


## மனதார நன்றி கூறி அன்புடன் வாழ்த்துகின்றோம்



யா/அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் புனரமைப்புத் திருப்பணிக்கு ரூபா ஐந்து லட்சம் ஒதுக்கீடு செய்தமைக்காக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் மொழி விவகாரங்கள் அமுலாக்கல் இந்து கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு கௌரவ அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

அத்துடன் இச் செயற்பாட்டிற்கு உறுதுணையாயிருந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நன்றியுடன்
அத்தியடிப் பிள்ளையார் கோயில் நிர்வாகம்,
அத்தியடி இந்து இளைஞர்கள்
மற்றும் ஆலய அடியார்கள்.

(C-17446)



## கண்காட்சி நீடிப்பு

தூரிகை நுண்கலை வளாக மனைப்பொருளியற் கண்காட்சி அநேகரின் வேண்டுதலில் இன்று (16.07.2001) மாலை வரை விற்பனையுடன் இடம்பெறும்.

*இடம்:* **செங்குந்தா வீதி, கல்வியங்காடு.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(90135) - இயக்குநர்.



VESTA

## வெஸ்ரா நெல்லிக் கிரஷ்

அரச சுகாதாரத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப் பெற்ற
**நெல்லிப்பானம்**

மருத்துவ உருளை நெல்லியைப் பதப்படுத்தி அதன் சாற்றில் தயாரிக்கப்பட்ட ஔடத பானம்.

பதினைந்து வருட காலமாகப் பாவனையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றது வெஸ்ரா நெல்லிக் கிரஷ்! இன்றே வாங்கிப் பாவியுங்கள்!!




*விநியோகஸ்தர்கள்:*

**வெஸ்ரா இன்டஸ்ரீஸ்**
குளப்பிட்டி வீதி,
உயரப்புலம், -
ஆனைக்கோட்டை.

(C-90132)


## தவறிவிட்டது

கண்டி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த மகாதேவன் நளாயினி என்பவரது தே.அ.அட்டை (இல. 595070457 V), வி.அ.அட்டை (இல. 091011835) யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க.சிவராமலிங்கம் இல.28, குமாரசாமி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(C-17449)

**யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும்**

வண. அதிபர் D.T. **நைல்ஸ்** அவர்களுடைய வாழ்க்கைக்கும் இறைபணிக்குமான 31 ஆவது ஞாபகார்த்த நன்றி செலுத்தும் வழிபாடு யாழ்.பரி.பேதுரு ஆலயத்தில் (நிம்மர் மண்டபத்தில்) நாளை மாலை 4 மணிக்கு நடைபெறும். *இந்த வழிபாடு நேற்று நடைபெறும் என நேற்றைய உதயனில் தவறாக விளம்பரப்படுத்தியமைக்கு வருந்துகிறோம்.* (C/17447)


**நாகம்ஸ் சுன்னாகம்**

சரத்குமார், மீனா
சுவலட்சுமி, வடிவேல்
நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த
**மாயி** (ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30
(90119) (புதிய நேரம்)



**ராஜா யாழ்ப்பாணம்**

அநேகரின் வேண்டுகோளுக்கு
இணங்க
9 வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
**CITIZEN சிட்டிசன்**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17266)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஐயாத்துரை புவனேஸ்வரி

சுதுமலை அண்ணாமலை வீதியைச் சேர்ந்த திருமதி ஐயாத்துரை புவனேஸ்வரி நேற்று (15-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஐயாத்துரையின் மனைவியும், சாந்தன், உமையாள, திருமகள் ஆகியோரின் தாயாரும், சாந்தமலர், காலஞ்சென்ற மணிவண்ணன், சரவணபவன் ஆகியோரின் மாமியாரும சயந்தூரன், சாரங்கி,சியாமளன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (15-07-2001) தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அண்ணாமலை வீதி,*
*சுதுமலை தெற்கு.* (90136)

தகவல்:
சாந்தன்(மகன்)

## கணபதிப்பிள்ளை வினோதினி

உடுவில் தெற்கு யாமச்சந்தியைப் பிறப்பிடமாகவும் வயிரவப் புலியங்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வினோதினி 14-07-2001 சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் அன்னபூபதியின் மகளும் சிவபாலன் (ஜேர்மனி), சிவகுமாரி, காலஞ்சென்ற சந்திரகுமாரி மற்றும் சந்திரலேகா, வதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தில்லைவாசன் (மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. ச.), சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திவ்யா, ஜெனார்த்தன், மிதுஷா, கரிகரன், திவ்வியறஞ்சித் ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-07-2001) திங்கட்கிழமை வவுனியாவில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக வவுனியா தச்சனான்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

*உடுவில் தெற்கு,*
*யாமச் சந்தி.* (90134)

**ந. தில்லைவாசன** (மைத்துனர்)
மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

## சிவபாதம் கிருஷ்ணகுமார்

பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சி.கிருஷ்ணகுமார் அவர்கள் 2001-07-11 ஆம் திகதியன்று ஜேர்மனியில் அகாலமரணமடைந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற தம்பிராசா சிவபாதம் - புஸ்பவதி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற **V.V.**கணேசமூர்த்தி, சீவரத்தினம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மருமகனும் பாக்கியலச்சுமியின்(ஜேர்மனி), அன்புக் கணவரும், நிசாந்தன்(ஜேர்மனி), நிர்மலன்(ஜேர்மனி), நிலோஜினி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமார்(கனடா), சூரியகுமார்(கனடா), நந்தகுமார்(உதவிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்) விக்கினேஸ்வரி, கலைவாணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேந்திரராசா(ஆஸ்திரேலியா), தெய்வேந்திரராசா (ஆஸ்திரேலியா), தனேந்திரராசா(ஆஸ்திரேலியா), சரஸ்வதி, விக்கினேஸ்வரமூர்த்தி (ஆஸ்திரேலியா), சிவசோதி(ஆஸ்திரேலியா), ரமணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16-07-2001) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சி.நந்தகுமார்**
(சகோதரன்)

*தும்பளை, பருத்தித்துறை.* (C-17448)

## வேலுப்பிள்ளை கணேஸ்வரி

கச்சாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நல்லதம்பி வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி, வேலுப்பிள்ளை கணேஸ்வரி நேற்று (15-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் ஐயாத்துரை(லண்டன்), கனகாம்பிகை, மகேசன் (ஆசிரியர், கச்சாய் அ.த.க. வித்தியாலயம்), பராசக்தி(ஆசிரியை, வவுனியா தமிழ மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும் மகேஸ்வரி(லண்டன்), கந்தசாமி(இ.போ.ச.சாலைப் பரிசோதகர் - பருத்தித்துறை), மஞ்சுளாதேவி(ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), வரதராஜன் (ஆசிரியர்,வவுனியா தமிழ் மகா வித்.) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனார்த்தன், வைகுந்தன், எழில்யா, குஷானி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்), தாரகா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-07-2001) திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு கிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:-
*விக்னேஸ்வராக் கல்லூரி வீதி(மதவடி)*
*கரணவாய் கிழக்கு, கரவெட்டி.*

நிரந்தர முகவரி:-
*கச்சாய்,*
*கொடிகாமம்* (C-17450)

தகவல்:
**வே.மகேசன்** (மகன்)
**க.கந்தசாமி** (மருமகன்)




யாழ்.றோட்டறிக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் நேற்று யாழ்.நகரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட றோட்டரிக் கழக முன்னாள் தலைவர் றோட்டேரியேன் கே.ஸ்ரீபதி, பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, தலைவர் பதவியைப் பூர்த்தி செய்த றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம், கழகத்தின் செயலாளர் றோட்டேறியன் கப்டன் என்.சோமசுந்தரம் ஆகியோர் பிரதான மேடையில் அமர்ந்திருப்பதையும், கழகத்தின் தெரிவுத் தலைவர் பி.விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினருக்கு நினைவுக் கேடயம் ஒன்றை பரிசளிப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- ஸ்ருடியோ ராஜீ)*

### கடந்த ஆண்டு ஜனாதிபதி கொண்டுவந்த

# முன்னைய அரசமைப்பு வரைபை அரசு மீளச் சமர்ப்பிக்கமாட்டாது

## *அமைச்சர் பத்திரன கூறுகிறார்*

கொழும்பு,ஜூலை16

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 3 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இரு தினங்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அரசினால் வாபஸ் பெறப்பட்ட உத்தேச அரசமைப்புச் சட்ட வரைபை மீண்டும் சமர்ப்பிக்கும் உத்தேசம் இல்லை.

- சபைத் தலைவரும் உள்நாட்டு அலுவல்கள், பொது நிர்வாக அமைச்சருமான ரிச்சார்ட் பத்திரன இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

புதிய ஓர் அரசமைப்பின் தேவை குறித்தே சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் கருத்தை அறிய அரசாங்கம் உத்தேசம் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் உறுதியான அரசை அமைப்பதே அதன் நோக்கம்.

ஓகஸ்ட் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்கள் முன்னிலையில் நான்கு பிரதான கேள்விகளை அரசு முன்வைக்கப் போகிறது. நாட்டில் சமாதானம் மீள நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை வாக்காளர்கள் விரும்புகின்றனரா என்பது முதற்கேள்வி - என்றும் அமைச்சர் பத்திரன தெரிவித்திருக்கிறார். (ஐ)

## வீரமக்கள் தினத்தின் இறுதி நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை16

புளொட் அமைப்பினால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் வீரமக்கள் தின நிகழ்வுகளின் இறுதி நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ்.முற்றவெளி மைதானத்தில் உள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தோரின் நினைவுத் தூபி முன்றிலில் பெயர் முகப்பு வளைவு திறந்து வைக்கும் நிகழ்ச்சி இன்று நடைபெறும். அதனைத் தொடர்ந்து போரில் உயிர்நீத்த தளபதிகள், தலைவர்கள், தியாகிகள் அனைத்து இயக்கப் போராளிகள் ஆகியோரை நினைவுகூர்ந்து அஞ்சலி உரைகளும் நடைபெறும் என்று புளொட் அமைப்பு அறிவித்துள்ளது. *(மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)* (ஐ)

## கரவெட்டியில் தேடுதல்

வடராட்சி,ஜூலை16

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் நேற்றுப் படையினர் பெரும் எடுப்பில் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வீதி தொடக்கம் கலிகைச் சந்தி வரையான பிரதேசத்துள் அடங்கும் யார்க்கரு, கெவளை, கிழவி தோட்டம், இராசகிராமம், கீரிப்பள்ளி, தோவில்சந்தை ஆகிய பகுதிகளில் தேடுதல் நடத்தப்பட்டது. (ஐ-117)

## கட்டுமரங்களில் பாய்போட்டு மீன்பிடிக்கத் தடை

தென்மராட்சி,ஜூலை16

வடமராட்சி வடக்குக் கடலில் பாயுடன் கட்டுமரங்களில் மீன் பிடிக்கச் செல்ல கடந்த புதன்கிழமை தொடக்கம் படையினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் இந்த நடவடிக்கையால் சுமார் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். (ஐ-117)

## திவ்வியனை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூலை16

காங்கேசன்துறை கைதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவன் திவ்வியனை யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். 51 ஆவது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர, யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் குடாஹெட்டிய ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். (ஐ-7)

### சாரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் வண்டிகளை உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்துமாறும் அச்சுறுத்தியதுடன் சாரதியாகக் கடமையாற்றும் நகுலேஸ்வரன் என்பவரை மிகமோசமாகத் தாக்கியுள்ளனர். காயமடைந்த இவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து நேற்று மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பின்னர் மட்டக்களப்பு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மட்டக்களப்பு போக்குவரத்துச் சபைக்குச் சென்று நிர்வாகத்தினருடன் பேசியதுடன் சம்பந்தப்பட்ட படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக உத்தரவாதம் அளித்ததையடுத்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. (ஐ-21)

கணனிக் கண்காட்சி - 2001

நெல்லியடி - கரவெட்டி

எமது வடமராட்சிக் கிளை நிறுவனத்தால் இம்மாதம் 15,16,17 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து பிற்போடப்பட்ட கணனிக் கண்காட்சி எதிர்வரும் 19,20,21 ஆம் திகதிகளில் நடைபெறும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

இயக்குநர்,
IIS

(C/17444)

BIT
அனுமதி அட்டைகள்

எமது நிறுவனத்தின் ஊடாக BIT பட்டப்படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்குரிய தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அனைத்து மாணவர்களும் அலுவலகத்துக்கு வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
(C/17445) IIS,யாழ்ப்பாணம்.

### வடமராட்சி மணற்காட்டில்

## சவுக்கு மரத் தோப்புக்கு விசமிகள் தீ வைப்பு!

மணற்காட்டிலுள்ள சவுக்கு மரத் தோப்புக்குக் கடந்தவாரம் மீண்டும் விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் கடமையாற்றும் ஒரு சில ஆசிரியர்களால் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் தீ பெருமளவில் பரவாமல் அணைக்கப்பட்டது.

கடந்த காலத்தில் பலமுறை இவ்வாறு விசமிகளினால் தீ வைக்கப்பட்டதினால், பல ஏக்கர் நிலத்திலுள்ள சவுக்கு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

விறகு வியாபாரத்திற்காகவே சில விசமிகள் சவுக்கு மரங்களுக்குத் தீ வைத்து எரித்துவருவதாகக் கூறப்படுகிறது.

வல்லிபுரம் சோதனைச் சாவடிக்கு ஊடாக சவுக்கு விறகு கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளபோதிலும், வெளியிடங்களில் இருந்து வேறு பாதையால் விறகு வியாபாரிகள் சயிக்கிள்களில் அப்பகுதிக்கு வருவதாகக் கூறப்படுகிறது.

வன பரிபாலனத் திணைக்களம் மணற்காட்டிலுள்ள சவுக்கு மரத் தோப்பினைப் பரிபாலித்துப் பாதுகாக்க முன்வராவிடில் எதிர்காலத்தில் அப்பகுதியிலுள்ள சவுக்கு மரங்கள் முற்றாக அழிந்துபோய்விடுமென அப்பகுதி பொது ஸ்தாபனங்கள் கவலை தெரிவிக்கின்றன. (ஐ-182)

## திவ்வியனை ஆஜர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.குடாநாடு பற்றியும் இங்கு வாழும் மக்களையும் நான் சுமார் 30 வருட காலமாகத் தெரிந்து வைத்துள்ளேன். யாழ். மக்களின் மிகப் பெரும் சொத்து கல்வி. எனவே பரீட்சைகள் நெருங்கி வரும் வேளைகளில் பாடசாலைகளை மூடிவைத்திருப்பது நல்லதல்ல.

பல்கலைக்கழக விடயம் பல்கலைக்கழகத்துடன் நிற்கட்டும். எனவே பாடசாலைகளை மீளஇயக்கும் வகையில் பாடசாலைகளுக்குச் செல்லுமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுங்கள.

பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து உயர் கல்வி அமைச்சர் இந்திக குணவர்த்தன மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

எனவே அதுவரை திவ்வியனை பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் சென்று பார்வையிடவும், மாணவர்கள் தமக்கு விரும்பிய சட்ட வைத்திய அதிகாரி ஒருவரை அழைத்துச் சென்று திவ்வியனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவும் ஏற்பாடு செய்து தருகின்றேன்.

இவ்வாறு மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர - தெரிவித்தார்.

### அதிபர் சங்கத் தலைவர்

வட மாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் க.இராசதுரை அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

கடந்த வியாழக்கிழமை முதல் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிப்பதில்லை. இந்தவேளையில் மாணவர்களைப் பாடசாலைகளுக்கு வருகை தருமாறு நாம் வற்புறுத்த முடியாது.

பாடசாலைகள் இயங்காமையால் மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இந்தப் பிரச்சினைக்கு விரைவில் முடிவு காணப்பட வேண்டும் - என்றார்.

### மாணவர் பிரதிநிதி

மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன் அங்கு உரையாற்றுகையில் -

திவ்வியன் கைது செய்யப்பட்டதையடுத்து நாம் எமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வந்தோம். பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எந்தவித நெருக்கடிகளும் கொடுக்கவில்லை. இதனால் பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகள் குழம்பவில்லை. எனினும் இந்த நிலையில் பல்கலைக்கழகம் மூடப்பட்டமை மாணவர்களிடையே ஆத்திரத்தையும், அரசாங்கம் மீதான நம்பிக்கையில்லாத் தன்மையையும் ஏற்படுத்திவிட்டது.

திவ்வியனை விடுதலை செய்வதாக பொலீஸ் அதிகாரிகள் கடந்த வாரமே எமக்கு வாக்குறுதி அளித்திருந்தனர். ஆனால் அவர் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை.

பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக இதுவரை காலமும் படையினர் நடந்துகொண்டவிதம் கவலைக்குரியது. இதுவே படையினர் மீது எமக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிட்டது.

மாணவர்களைப் பாடசாலைகளுக்குச் செல்லுமாறு பல்வேறு வழிகள் மூலம் பலவந்தப்படுத்துவது தவிர்க்கப்படவேண்டும்.

தமது உரிமைகளுக்காகப் போராடுவதற்கு பல்கலைக்கழக மாணவருக்கு உரிமையுண்டு. அதற்கு ஆதரவு வழங்கும் உரிமை பாடசாலை மாணவர்களுக்கும் கல்விச் சமூகத்துக்கும் உள்ளது. எனவே பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு நாங்கள் மாணவரிடம் கோரமாட்டோம். இது விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்து நிலைமையைச் சுமுகமாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

- என்று மாணவர் ஒன்றிப் பிரதிநிதி தெரிவித்தார். (ஐ-7)

### திவ்வியனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளமை தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

"யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளராகச் செயற்பட்டுவந்த திவ்வியன் பாதுகாப்புப் படையினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் குரல் கொடுத்து வந்தார். அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோருகிறோம். விடுவிக்கமுடியாத பட்சத்தில் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும். அத்துடன் யாழ். பல்கலைக்கழகத்தை மீளத் திறக்க வேண்டும்" - என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

### புதன்கிழமை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளுக்குத் திரும்புமாறு மாணவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மாணவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் நிலையிலும் அரசு கண்டும் காணாதது போன்று கண்மூடி இருக்கிறது. மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகப் பாடசாலை மாணவர்களை அடுத்த புதன்கிழமை தொடக்கம் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். நாம் வேண்டுகோள் விடுப்பதற்கு முன்பாகவே - ஒரு தமிழ் மாணவனுக்குச் சம்பவித்த கோரமான நிலையினைச் சிந்தித்து - நீங்களாகவே முன்வந்து எமக்களித்த முழுமையான ஆதரவுக்குப் பல்கலைக்கழகச் சமூகம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. திவ்வியனை விடுவிப்பதற்குப் படைத்தரப்பு ஒருவார அவகாசம் கோரியிருக்கிறது. இவ்வார இறுதிக்குள் சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் நாடளாவிய மாணவர் போராட்டம் மிகப்பெரிய அளவில் முன்னெடுக்கப்படும் - என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(அறிக்கையின் முழு விபரம் 2 ஆம் பக்கத்தில்)* (ஐ)

### நாடாளு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டதற்கான நோக்கம் குறித்து ஆட்சேபனையும் கண்டனங்களும் தெரிவிக்கமுடியும் என்றாலும், ஜனாதிபதியின் பிரகடனத்தை ரத்துச்செய்து - நாடாளுமன்றத்தை மீளக்கூட்டி - நாடாளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமற்றது என அவதானித்து உள்ளேன்.

அரசமைப்பின் பிரகாரமே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே எனது அதிகாரத்தின் எல்லைகளை மீறமுடியாதுள்ளது.

ஜனாதிபதியின் பிரகடனம் செல்லுபடியற்றது என சாட்சியங்களைக் கொண்டு நிரூபிக்கப்படும் வரை அதன் மீதான நீதிபரிபாலனத்தை மேற்கொள்ளவோ, அதன்மீது விசாரணை நடத்தவோ அரசமைப்பில் எனக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. அத்தகைய சாட்சியங்களை அவதானிக்கவும் இல்லை - என்று தனது கடிதத்தில் சபாநாயகர் தெரிவித்திருக்கிறர். (ஐ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.